271/ நூ-தொ / தன்-வை-குருநூல் உரை
18 ] 5/

தன்வந்திரி வைத்திய குருநூல் 200

பக்கம் 56..

தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய் மொழிந்தருளிய
ஞான யோக சாஸ்த்திர ஆராய்ச்சி நிலையம்,
ஸ்ரீ மீனுக்ஷி அம்மன்கோவில் (வடக்கு ஆடி வீதி,)

ஸ்தாபகர்:- பரமபதி துணை!.
ந. சுப்பிரமணியபிள்ளை என்ற ஞானபண்டிதசுவாமி

தன்வந்திரி பகவான

அருளிச்செய்த

# வைத்ய குருநூல் 200

மதுரை இராமாயணச்சாவடித்தெரு, சித்தவைத்தியர்,

S. வன்னியக்கோனர் அவர்களால்

பரிசோதித்து

மதுரை புதுமண்டபம், புத்தகஷாப்,

இ. ராம.

## குருசாமிக்கோனர் சன்

அவர்களாற்றமது

மதுரை, வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனர் தெரு,

ஸ்ரீர்ராமச்சந்திர விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

1938

இதன் விலை (காபி ரைட்) அணு 0—12—0

இரண்டாம் பதிப்பு.

சிவமயம்.

# தன்வந்திரி வைத்தியக் குரு நூல் 200.

# அட்டவணை.


| | | | |
|---|---|---|---|
| முப்பூ விபரம் | 15 | கரும நோய்க்கு லேகியம் | 106 |
| சுர மாத்திரை | 22 | நூல் விபரம் | 112 |
| குங்குமக் குளிகை | 24 | தைலம் | 120 |
| வயிரவன் மாத்திரை | 26 | தோச சுரக் கஷாயம் | 130 |
| சஞ்சீவி மாத்திரை | 28 | மேகத்திற்குக் கியாழம் | 132 |
| கிரந்தி மாத்திரை | 31 | சிங்கிப் பற்பம் | 135 |
| கலிக்கம் | 34 | ஆக்கிராணம் | 138 |
| மேக ராஜாங்க எண்ணெய் | 39 | வல்லாரைக் கற்பம் | 143 |
| வாத ராஜாங்க எண்ணெய் | 46 | உருத்திரக் கற்பம் | 149 |
| வாதத்திற்குத் தைலம் | 54 | வங்கப் பற்பம் | 150 |
| கரப்பானுக்கு எண்ணெய் | 56 | தாமிரப் பற்பம் | 155 |
| மேகத்துக்கு எண்ணெய் | 61 | பித்தளைப் பற்பம் | 159 |
| பெரும்பாண்டுக் கெண்ணெய் | 65 | அயப் பற்பம் | 161 |
| புடத் தைலம் | 69 | வெங்கலப் பற்பம் | 163 |
| புங்கவிரைத் தைலம் | 70 | நிராப் பற்பம் | 165 |
| இரணங்களுக்குத் தைலம் | 74 | இரசச் செந்தூரம் | 172 |
| சயத்திற்குத் தைலம் | 76 | காந்தச் செந்தூரம் | 175 |
| மூலச் சூட்டுக்குத் தையிலம் | 78 | கெந்தகச் செந்தூரம் | 177 |
| தாளிசப்பத்திரிச் சூரணம் | 85 | கட்டுவசைச் செயநீர் | 180 |
| பித்தச் சூரணம் | 87 | லிங்கக் கட்டு | 182 |
| பீனிசத்துக்குச் சூரணம் | 90 | தாளக உப்பு | 183 |
| வல்லாரைக் கிருதம் | 94 | பூரக் கட்டு | 185 |
| முயல் நெய் | 97 | வெள்ளைப்பாஷாணக் கட்டு | 186 |
| பிரம லேகியம் | 100 | மந்திரத் தைலம் | 191 |

சிவமயம்.

தன்வந்திரி பகவான் திருவாய் மலர்ந்தருளிய,

# சாஸ்திரங்கள்.

| | | |
|---|---|---|
| 1-வது | வைத்திய சிந்தாமணி | 1200 |
| 2-வது | வைத்திய காவியம் | 1000 |
| 3-வது | வைத்திய நாலுகாண்டம் | 800 |
| 4-வது | கலைக் ஞானம் | 500 |
| 5-வது | தைலம் | 500 |
| 6-வது | சிமிட்டு ரத்தினம் | 360 |
| 7-வது | நிகண்டு | 300 |
| 8-வது | வைத்தியம் | 300 |
| 9-வது | தன்வந்திரி குணவாகடம் | 230 |
| 10-வது | வைத்தியக் குருநூல் | 200 |
| 11-வது | தண்டகம் | 140 |
| 12-வது | வைத்திய சூஸ்திரம் | 73 |
| 13-வது | முப்பூ சூஸ்திரம் | 50 |
| 14-வது | செய நீர் | 50 |
| 15-வது | சொரூபானந்தம் | 50 |
| 16-வது | கருக்கடை சூஸ்திரம் | 40 |
| 17-வது | வைத்திய சூஸ்திரம் | 39 |
| 18-வது | கலைக்ஞான சூஸ்திரம் | 32 |
| 19-வது | ஞான சைதன்னியம் | 21 |
| 20-வது | வைத்திய சூஸ்திரம் | 15 |
| 21-வது | பூஜாவிதி | 15 |
| 22-வது | வைத்திய ரத்தினம் | 12 |
| 23-வது | ஞான சூஸ்திரம் | 12 |
| 24-வது | ஞானானந்தம் | 10 |
| 25-வது | வைத்திய சூஸ்திரம் | 10 |
| 26-வது | ஞான வெண்பா | 6 |

உ

பரமபதி துணை.

# தன்வந்திரி பகவான்,

## திருவாய் மலர்ந்தருளிய,

## வைத்திய காண்டம் 200.

காப்பு—வெண்பா.

ஆதியந்த மில்லா தகண்டபரி பூரணமாய்ச்
சோதியந்தம் வாழ்மயிலே சொற்பெரிய—வாதிகள்கேள்
நாதியந்த மானசத்து நல்ல சரஸ்பதியே
வாதியெந்தன் பங்கிலுறை வாழ்வே. (1)

வாதியென்ற வல்லபையின் பாகம்வா ழைங்கரனுஞ்
சோதி மணிவிளக்கின் சொற்பெரிய—னாதிமறை
நாதியென்ன நான்முகவன் நல்ல பிரமனவன்
காதி யென்ன நாவிற் கணக்கே. (2)

கணக்கென்ன மூலகுரு பாதங் காப்பு
கனமான நந்தீசர் பாதங் காப்பு
வனக்கென்ன நாதாக்கள் பாதங் காப்பு
வளமான சற்குருவின் பாதங் காப்பு
அனக்கென்ன ரவிமதியின் பாதங் காப்பு
ஆனதொரு சதாசிவத்தி னமுதங் காப்பு
மணக்கென்ன தேவிசிவ காமி வாலை
மகத்தான தேவியம்பாள் பாதங் காப்பே. (3)

காப்பென்ன நந்தீச ரவரிடத்திற்
கருவாக எடுத்துப்பணி விடைகள் செய்து
வாப்பென்ன என்குணத்தை யரிந்தாரையா
வளமாக எனையழைத்தார் முன்னே நின்றேன்
ஆப்பென்ன அமுதமதை யூட்டி னார்பார்
அன்பாக ஊமைதனைக் காதிற் சொன்னார்
நாப்பென்ன அமிர்தரசங் கனிய லாச்சு
நலமாகச் சகலசித்தும் நினைவா லாச்சே (4)

ஆச்சப்பா ஊமைதனை நிகண்டிற் சொன்னேன்
அன்பான வாசிமறைப் பெல்லாஞ் சொன்னேன்
நாச்சப்பா மூன்றுலெட்சம் பாட லுக்கு
நலமாக நிகண்டிலே நான்தான் சொன்னேன்
வாச்சப்பா வைத்தியத்துக் காதி கேளு
வளமான அஷ்டாங்க வயிர வன்றான்
காச்சப்பா அவர்பூசை வேணும் பாரு
கனமான பூசையைந்தான் சொல்வேன் கேளே. (5)

கேளப்பா லங்கெனவும் டிங்டங் கென்றுங்
கெடியாக மங்கெனவும் நங்கென் றேசொல்
வாளப்பா வயிரவர்க்கு இம்மூ லந்தான்
வளமாக லெட்சமுரு செபித்துக் கொள்ளு
ஆளப்பா உன்னிடத்திற் கொலுவி ருப்பார்
அன்பான சக்கரத்தைச் சொல்லக் கேளு
நாளப்பா வரையாறுக் கீறிக் கொண்டு
நலமாகக் குறுக்கேயா ரரையுங் கீறே. (6)

கீறியே சுற்றிலுந்தான் சூலம் போடு
கிருபையாய்ப் பீஜங்கள் சொல்லக் கேளு
ஆறவே உத்திரத்தில் அங்ரங் மங்கென்
றூனதொரு சிங்கென் று போடு நீயே
மாறவே தெட்சணத்திற் சொல்லக் கேளு
மகத்தான ரங்கென்றும் ரீங்கென் றுந்தான்
நாறவே சிங்கென்றும் வங்கென்றே தான்
நலமாகக் கிழக்கினிலே சொல்லக் கேளே. (7)

கேளப்பா கிழக்கில்வடு காயா வென்று
கெணிதமுடன் மேற்கேதான் சொல்லக் கேளு
வாளப்பா வறீங்இறீங் கென்று போடு
வளமான அம்மென்றும் உம்மென் றுந்தான்
நாளப்பா நாற்சதுர மாகிப் போச்சு
நலமான உள்ளறையில் நாட்டக் கேளு
தாளப்பா இரண்டுண்டு நடுவிற் பாரு
தளமான வீட்டினிலே சொல்லக் கேளே. (8)

சொல்லுவேன் நாவென்ற எழுத்தைப் போடு
சொற்பெரிய நடுவெழுத்து லாவைப் போடு
அல்லவே கீழ்மேலாய்ச் சுழியைச் சுற்று
அப்பனே சுழிமுனையிற் சூலம் போடு
நல்லவே சூலத்தில் ரீங்காரம் போடு
நலமாக இம்மென்று ராவைப் போடு
வல்லவே ஊமையெழுத் திதுதான் பாரு
வளமான வடமொழியைத் திறந்திட் டேனே. (9)

திறக்கவே இவ்விதமாய்ச் செகத்தி லுண்டோ
தெரியாத மூடர்களே இருத்திப் பாரு
வறக்கவே சக்கரத்தைப் போட்டுக் கொண்டு
வளமான உத்தரமா யிருந்து கொண்டு
அறக்கவே பாயாசம் பலகாரங் கள்
அப்பனே தீபமொடு தூபங் காட்டு
நறக்கவே நாற்பத்தி அஞ்சுக் குள்ளே
நலமாகச் சித்தியதாம் நவின்று பாரே (10)

நவிலவே சித்தித்தாற் கரும நோய்கள்
நலமாக உன்முகத்தைக் கண்ட போது
அவிலவே ஓடிவிடும் நோய்கள் பாரு
ஆனதொரு நோய்களுன்னைக் கண்டு தானல்
மவிலுவேன் சிம்மந்தான் வருகு தென்று
வளமாக ஓடிவிடும் வினையாம் நோய்கள்
கவிலவே வடமொழியைக் கண்டா ரானற்
கருவாக உலகத்திற் சித்த னாமே. (11)

சித்தனைச் சடமெடுத்தா லெல்லா முண்டு
சிறப்பாக மற்றோர்க்குச் சித்தி யாமோ
அத்தனைய் மூன்றுருவு ஊமை தாண்டா
அப்பனே அஞ்செழுத்து மூமை யாலே
வத்தமா மெட்டெழுத்து மூமை யாலே
வளமைம்பத் தோரட்சர மூமை யாலே
பத்தனா யிருந்தோர்க்கு எல்லாஞ் சித்தி
பரிவாய்வா தத்திற்கெட் டலேவான் பாரே. (12)

பாரெனவே ஞானத்தைப் பாரார் மூடர்
பலமான பாவத்தைச் செய்வா ரையா
ஆரெனவே ஞானமொடு வைத்திய யோகம்
அப்பனே பார்த்தாக்காற் பாவ மாமோ
நாரெனவே ஒன்றுமில்லை ஏது மில்லை
நலமான அறுபத்து நாலுஞ் சொல்வேன்
வாரெனவே ஐம்பூத மோடிப் போகும்
வளமான கற்பத்தா லோட லாச்சே (13)

ஆச்சென்ற யோகத்தைப் பார்த்தா னாகில்
அன்பான வாதமொடு ஞானஞ் சித்தி
வாச்சென்ற வாதத்தா லென்ன வாகும்
வளமான ஞானத்தைப் பாரு பாரு
நாச்சென்ற ஞானத்தை யறிந்தா யானல்
நலமாகச் சிவயோகப் பதவி யாவாய்
தேச்சென்ற பொருளறிந்தோன் சித்தன் சித்தன்
சிறப்பாக மற்றோர்க்குச் சித்தி யாதே. (14)

முப்பூ விபரம்.

சித்தென்ன வுமைதனைத் திறந்து சொன்னேன்
சிறப்பான வழலையுட மார்க்கங் கேளு
அத்தென்ன வைத்தியத்தின் மார்க்கந் தானும்
அன்பான பூமியுட நாத மப்பா
சுத்தனா யிருந்தாக்காற் சொல்லக் கேளு
சொற்பெரிய உவர்ப்பூவைக் கொண்டு வந்து
நத்தென்ன படியொன்று அளந்து வாங்கி
நலமாக வைத்துநீ திங்கள் பாரே (15)

பாரப்பா பனிநீரைக் கொண்டு வந்து
பரிவாக இரண்டுபடி யதிலே வார்த்து
ஆரப்பா கலக்கியே அடுப்பி லேற்றி
அன்பான குழம்புபோ லாகும்போது
வாரப்பா இறக்கியே வைத்துக் கொண்டு
வளமாக ஆறிவரும் பதத்திற் கேளு
சீரப்பா பீங்கான்தா னகல மாகச்
சிறப்பாகக் கொண்டுவந்து வதனி லூற்றே. (16)

ஊற்றியதோர் பீங்கானைப் பதிவில் வைத்து
உறவான வாலையுரு லெட்ச மோது
ஆற்றியதோர் நைவேத்தியந் தூபங் காட்டு
அன்பான பால்பழங்கள் வஸ்து வைத்து
நாற்றியதோர் நாற்பதுநாள் சென்ற தானல்
நலமான பூப்பூத்துக் காய்க்கும் பாரு
வாற்றியதோ ரஞ்சுநாள் ஆன பின்பு
வளமாகக் காய்காய்த்துப் பழமாம் பாரே. (17)

பழமாகும் நாற்பத்து அஞ்சுக் குள்ளே
பரிவான பூவெடுத்துப் பதனம்பண்ணு
அளமாகுந் தீபமொடு தூபங் காட்டு
அப்பனே வைத்தியமுப்பு இதுதான் பாரு
நலமான முப்பூவின் சுண்ணங் கேளு
நன்மைபெற கல்வத்தில் முப்பூ விட்டு
வலமான் குக்குடத்தி னண்டம் வாங்கி
மஞ்சளதை நீக்கிவிட்டு விக்தை வாரே. (18)

வாரப்பா சாமமது ஒன்று ஆட்டி
வளமான பனிநீரால் சாம மாட்டு
ஆரப்பா வில்லை செய்து நிழலுலர்த்தி
அப்பனே விந்ததனை லேழு சீலை
பூரப்பா காயவைத்துப் புடங்குக் குடத்தில்
புடம்போடு சுண்ணமதாய் வெண்ணீராகுங்
காரப்பா சுண்ணத்தை யெடுத்துக் கொண்டு
கருவாக வயிரவர்க்குப் பூசை பண்ணே. (19)

பண்ணவே குப்பிதனிற் பதனம் பண்ணி
பண்பான மருந்துகளிற் கூடச் சேரு
அண்ணவே ஆக்கிராணங் கலிக்கத்தோடும்
ஆனதொரு கட்டுவகைச் செயநீ ரோடும்
மெண்ணவே செந்தூர பற்பத் தோடும்
மேலான மாத்திரைக ளெண்ணெ யோடும்
கண்ணவே தைலமொடு சூர ணங்கள்
கனமான லேகியத்தி லுந்தான் சேரே. (20)

தானான வாதமொடு ஞானப் போக்கு
தனதான தீட்சையொடு சமாதி தானும்
வானான கருக்கிடைசூத் திரத்திற் சொன்னேன்
வளமான வடமொழிதா னின்னூல் பாரு
மானான காயாதி கற்பங் கொண்டு
மகத்தான மந்திரங்கள் சக்கரங்கள்
தேனான நந்தீசர் கடாக்ஷத் தாலே
திறமாக விரித்துநான் சொல்வேன் பாரே. (21)

சுர மாத்திரை.

சொல்லவே மாத்திரைதா னென்று கேளு
சுகமான வாளமது பலந்தான் கானு
மெல்லவே பூரங்கால் அழிஞ்சி வேரின்
மேற்பட்டை கொடிவேலி வேர்ப்பட்டைகால்
அல்லவே யிதுவெல்லாஞ் சுத்தி செய்து
அப்பனே கல்வத்திற் போட்டு ஆட்டி
வெள்ளவே தனப்பாலாற் சாமம் ரெண்டு
வேதாந்தக் கையானிற் சாமம் ரெண்டே. (22)

இரண்டான காற்சாம மரைத்துக்கொண்டு
இரேசகபூ ரங்கும்பப் பூசைசெய்ய
வரண்டான துவரைபோ லுண்டை செய்து
வளமாக உலர்த்திநன்றாய்ச் செப்பில் வைத்து
கரண்டான தேனதிலே கொடுத்துப் பாரு
கைகடந்த சுரமெல்லா மோடிப் போகும்
அரண்டான சுரம்போகு மாத்தி ரைதான்
ஆனதொரு இம்மருந்தைச் சொல்லக் கேளே. (23)

குங்குமக் குளிகை.

கொள்ளவே குங்குமத்தின் குளிகை கேளு
கொடிதான குங்குமப்பூ பலந்தா னென்று
மள்ளவே திரிகடுகு திரிப லாதி
மகத்தான சாதிக்காய் கிறும்பு ஏலம்
விள்ளவே சந்தனத்தூள் மருதம் வேரும்
விதமான கடுகுரோ கணியுங் கூட்டு
அள்ளவே யிதுவெல்லா மரைதான் கூட்டு
அப்பனே கல்வத்திற் போட்டுக் கேளே. (24)

கேளென்ற பழச்சாற்றூற் சாம மொன்று
கெடியான இஞ்சிச்சார் சாமம் ரெண்டு
வேளென்ற கண்டங்கத்திரி பழத்தாற் சாமம்
விதமாக அரைத்ததனை வழித்தெடுத்து
ஆளென்ற சிறுபயர்போற் குளிகை செய்து
அப்பனே உலர்ந்தபின்பு செப்பில் வைநீ
மானென்ற அனுப்பான மறிந்து செய்தால்
மகத்தான குளிர்சன்னி சுரங்கள் போமே. (25)

## வைரவன் மாத்திரை.

போமென்ற வைரவன்மாத் திரையைக் கேளு
புகழான லிங்கமொடு நாவி கெந்தி
வாமென்ற வெங்காரம் சாரம் வீரம்
வளமாக யிதுவெல்லாம் விராகன் ரெண்டு
கோமென்ற சுத்திசெய்து கல்வத்திட்டு
குணமான லவங்கமொடு பத்திரி சுக்கு
ஆமென்ற வகையானி விரண்டு சாமம்
அப்பனே மங்கையர்தன் பாலா லொன்றே. (26)

ரெண்டான குமரிச்சார் சாமம் ரெண்டு
ரேகித்து அரைத்ததனை வழித்தெடுத்து
அண்டான பனிப்பயர்போல் மாத்திரை செய்து
அப்பனே ரவிதனிலே உலர்த்திக் கொண்டு
வண்டான மனிதருக்கு அனுப்பா னத்தில்
மாட்டிடவே நோய்தீருஞ் சொல்லக் கேளு
கண்டான கழற்சன்னி சேத்ம சன்னி
கனமான குளுமைமுதல் சுரங்கள் போமே. (27)

## சஞ்சீவி மாத்திரை.

போமப்பா சஞ்சீவி மாத்திரை கேளு
புகழான நாவியுடன் சூதம் லிங்கம்
வாமப்பா அரிதாரம் பூரங் கெந்தி
வளமான ரசத்தின் செந் தூரங்கூட்டி
காமப்பா சுத்திபண்ணி இதுவெல் லாந்தான்
கனமான பலகைதான் கல்வத் திட்டு
நாமப்பா கிரும்புடனே பத்திரி ஏலம்
நலமாந்திரி கடுகுதிரி பலாதி யெண்ணே. (28)

எண்ணவே நேர்வாளஞ் சுத்தி செய்து
இதமாகப் பலமரைதான் கூடச் சேரு
வண்ணவே நிம்பக்காய்ச் சாற்றும் சாமம்
வளமான கள்ளிப்பால் சாமம் ரெண்டு
மன்னவே குமரிச்சார் சாமம் நாலு
வளமான கொன்னைப்பட்டைச் சாறு சாமம்
அன்னவே சாமமது எட்டு மாட்டி
அப்பனே ஆட்டியபின் மாத்திரை செய்யே. (29)

செய்யவே அனுப்பான மறிந்து செய்தாற்
செயமான சன்னியொடு சுரங்கள் தோஷம்
மையவே மாண்டுவிடும் நோய்க ளெல்லாம்
மகத்தான பால்தேனிற் கொள்ளும் போது
வையவே செத்தபிண மெழுந்தி ருக்கும்
வளமாக விதியிருந்தால் பிழைப்பா னப்பா
கையவே விதியில்லா விட்டாற் கேளு
கனமூன்றே முக்கால்நா ழிகையிற் போமே. (30)

கிரந்தி மாத்திரை.

போமப்பா யிந்தமுறை யாருஞ் சொல்லார்
புகழான என்னந்தி முறைதா னப்பா
வாமப்பா வழிதுரையாய்ச் சொல்லி விட்டேன்
வளமான நந்தீச ரருளி னாலே
காமப்பா கிரந்தியெல்லாம் போவ தற்குக்
கனமான மாத்திரைதா னென்று சொல்வேன்
நாமப்பா பூரமுடன் கெந்தி சேரு
நலமான கருஞ்சீர கந்தான் சேரே. (31)

சேரப்பா பறங்கிப்பட்டை யிம் மூன்றுந்தான்
செயலாகச் சுத்திசெய்து கல்வத் திட்டு
வாரப்பா சீரகமுங் கூடப் போட்டு
வளமான கையான்சா றதனு லாட்டி
ஆரப்பா தாணிக்காய்போ லுண்டை செய்து
அப்பனே எடுத்துகன்றுய் நோய்கட் கீய்ந்தால்
நாமப்பா நசித்துவிடு முதிர்ந்து போகும்
நலமான பத்தியந்தான் புளிப்புத் தள்ளே. (32)

தள்ளவே அரைக்கீரை பிரட்டிக் கொள்ளு
தனதான முருங்கைக்காய் கத்திரி யாகும்
விள்ளவே உப்பதனை வருத்துக் கூட்டு
விதமான மாத்திரையை விழுங்கிக் கொள்ளு
நள்ளவே கிரந்திகளுந் தவறுண் டேபோம்
நலமான மாத்திரையாற் நன்மை யாகும்
அள்ளவே கலிக்கத்தின் மாத்திரை கேளு
அசுவினியே வெங்காரம் நாலுங் கூட்டே. (33)

கலிக்கம்.

கூட்டவே வெண்மிளகு வாளங் கூட்டு
கூறுக விதுவெல்லாஞ் சுத்தி பண்ணி
ஆட்டவே வகைக்குஒரு கழஞ்ச கூட்டு
ஆனதொரு திரிகடுகு கூடச் சேரு
வாட்டவே கல்வத்திற் போட்டுக் கொண்டு
வளமான பழச்சாற்றாற் சாம மூன்று
காட்டவே கன்னிமுலைப் பாலாற் சாமங்
கருத்தாக வெற்றிலைச்சார் சாமம் நாலே. (34)

நாலான வெற்றிலைச்சா றதனிற் போடு
நாதாந்த சன்னியோடு விஷங்கள் போக
சாலான முலைப்பாலிற் போட்டிட் டாக்காற்
சமத்தான குளிருடனே சுரமும் போகும்
ஆலான அமுதாதி கலிக்கஞ் சொன்னேன்
அப்பனே சன்னிமாத் திரைதான் கேளு
மேலான முத்தமொடு வெடியுப் புந்தான்
மேன்மேலும் பூரமுடன் கௌரி கூட்டே. (35)

கூட்டப்பா அதிமதுரம் அக்கிரா காரம்
குணமான மருந்தெல்லாங் கல்வத் திட்டு
காட்டப்பா எலுமிச்சம் பழச்சார் சாமம்
கனமான இஞ்சியுட னீரிற் சாமம்
நீட்டப்பா நிம்பச்சா றதனிற் சாமம்
நேர்மையுடன் பத்மினியா மங்கை யின்றன்
ஆட்டப்பா தனப்பாலிற் சாம மாட்டு
அப்பனே ஆட்டியபின் மாத்திரை செய்யே. (36)

செய்யப்பா இதுவெல்லா முப்பூச் சேர்த்து
செயமான புடம்போட்டாற் சரக்கைக் கொல்லும்
வையப்பா ஒருகுளிகை தேனிற் கொள்ள
வளமான சன்னிபதி மூன்றுந் தீரும்
அய்யப்பா அனுப்பான மறிந்து கொள்ள
ஆனதொரு விஷசன்னி தோஷம் போகும்
கையப்பா சிறுவர்களும் வைத்தியஞ் செய்வார்
கருதியதோர் குளிகையது செய்துபாரே. (37)

பானென்ற மாத்திரைக ளிதற்கீ டல்ல
பண்பான சீடர்களே உங்களுக்கு
நானென்ற ஆணுவத்தாற் சொல்லிப் போட்டேன்
நலமான கருக்கலெல்லா மிதிலே தானும்
ஆனென்ற மேகமது இருபத் தொன்றும்
அப்பனே மேகத்தா லெழுந்த ரோகம்
தானென்ற சயமெட்டும் நீரழிவுந்
தனதான சூலைபதி னெட்டும் போமே. (38)

மேகராஜாங்க எண்ணெய்.

ஆமப்பா மேகத்தா லெழுந்த ரோகம்
ஆனதொரு வியாதியைத்தான் சொல்லப் போமோ
காமப்பா மேகரா சாங்கத் தெண்ணெய்
கருவாகச் சொல்லுகிறே னெழுங்கு கேளு
வாமப்பா கருங்கய்யான் படிதா னென்று
வளமான சங்கின்சார் படிதா னென்று
காமப்பா கருநொச்சி படிதா னென்று
கனமான செவ்வெள்ளி படிதா னென்றே. (39)

ஒன்றான கோவைச்சார் படிதா னென்று
உத்தநெல்லிக் காயின்சார் படிதா னென்று
கன்றான கரிப்பான்சார் படிதா னென்று
கனமான ஆவரைச்சார் படிதா னென்று
நன்றான இத்திப்பா லுடனே தானும்
நலமான ஆலம்பால் படிதான் காலு
அன்றான அத்திப்பால் படிகா லாகும்
அப்பனே ஆரைச்சார் படிதா னென்றே. (40)

ஒன்றுந்தக் காளிச்சார் படிதா னென்று
உத்தமனே குமரிச்சார் படிதா னென்று
கன்றான கன்னிப்பால் படி யரைக்கால்
கனமார்ம்வெள் ளாட்டின்பால் படிதா னென்று
வன்றான ஆவின்பால் படிதா னென்று
வளமான தேங்காய்ப்பால் படிதா னென்று
நன்றான உருவிச்சார் படிதா னென்று
நலமான அவுரிச்சார் படிதா னென்றே. (41)

ஒன்றான கழுதைப்பால் படி யரைக்கால்
உற்றசிற்று மணக்கெண்ணெய் படி யிரண்டு
வன்றான எள்ளெண்ணெய் படிதா னென்று
வளமாகக் கற்கவகை சொல்லக் கேளு
அன்றான திரிகடுகு திரிப லாதி
ஆனதொரு ஏலமொடு கிராம்பு பத்திரி
நன்றான வெட்டிவேர் விலாமிச் சோடு
நற்சந்தனத் தூள்தேவ தாரி தானே. (42)

தானான இவையெல்லாந் தேங்காய்ப் பாலில்
தனதாக அரைத்தெண்ணெய் தனிற்க லக்கி
வேனான சாரதனில் எண்ணெ யொன்றாய்
மேலான சட்டிதனிற் கலக்கிக் கொண்டு
மானான அடுப்பேற்றித் தீயை மூட்டி
வளமான சாமமது ப்னிரெண் டப்பா
கானான ஒருவிறகால் எரித்துக் கொண்டு
கனகமதா யிறக்கியதைப் பதியில் வையே, (43)

வையப்பா எண்ணெய்தனை வடித்துக் கொண்டு
வளமான வயிரவர்க்குப் பூசை பண்ணு
கையப்பா கரண்டிநிறை நாற்ப துநாள்
கைக்கொள்ள மேகமது தவறுண்டே போம்
மையப்பா வா தபித்த சயங்கள் யாவும்
மகத்தான சிலேத்மசய மெல்லாம் போகும்
நையப்பா கருமவினை மேக மெல்லாம்
நலமாகப் பறந்துவிடுங் கர்ம நோயே. (44)

நோயான வகையேது கர்மத் தாலே
நூறான கருமத்தால் வந்த நோய்தான்
வாயான வாதா சாங்கங் கேளு
வளமான எண்ணெயப்பா யார்தான் சொல்வார்
நாயமா யுள்ளபடி நான்தான் சொன்னேன்
நலமாக அறிவாலே கண்டு செய்வாய்
காயான கனிபழம்போ லின்னூ லப்பா
கருவாக என்னூலிற் சொல்வேன் பாரே. (45)

வாதராஜங்க எண்ணெய்.

பாரப்பா கண்டங் கத்திரியி னோடு
பரிவான மிளகரனை படிதா னென்று
காரப்பா வாகைச்சார் படிதா னென்று
கனமான மாவுலிங்கம் படிதா னென்று
ஆரப்பா கொன்றைச்சார் படிதா னென்று
அப்பனே வெள்ள றுகு படிதா னென்று
நாரப்பா வாதராசன் மூலிச் சாறு
நலமாகப் படியொன்று கூடச் சேரே. (46)

சேரப்பா இதுகளெல்லாங் கலக்கிக் கொண்டு
சேர்மானம் வெள்ளாட்டின் படிபா லொன்று
நாரப்பா கற்கவகை சொல்லக் கேளு
நலமான முருங்கைவேர் சங்க வேரும்
ஆரப்பா கொடிவேலி வேருங் கூட்டு
அப்பனே வெள்ளெருக்கு வேருங் கூட்டு
காரப்பா திப்பிலியுஞ் சுக்கு ஓமங்
கருவான கரியசீ ரகமுங் கூட்டே. (47)

கூட்டப்பா கிராம்புடனே காயம் பத்திரி
குறிப்பாக வகைவகைக்கு விராகன் ரெண்டு
வாட்டப்பா முன்சரக்கு வகைக்கு மைந்தா
வளமாகப் பலமரை தான் கல்வத் திட்டு
ஆட்டப்பா கடைச்சரக்கு வேர்கள் யாவும்
அப்பனே வெள்ளாட்டின் பாலி லாட்டி
நாட்டப்பா சிற்றண்டத் தெண்ணெய் நாழி
நலமான சாரோடெண் ணெயுந்தான் சேரே. (48)

சேரப்பா சட்டிதனில் வைத்துக் கொண்டு
செயலான கற்கத்தைக் கலக்கிக் கொண்டு
வாரப்பா அடுப்பேற்றிச் சாம மஞ்சு
வளமாகத் தீயெரித்து நன்றாய்க் காய்ச்சி
ஆரப்பா மெழுகுபதந் தனில் வடித்து
அப்பனே வயிரவர்க்குப் பூஜை பண்ணி
காரப்பா எண்ணெய்கா சிடைதான் கொள்ளு
ஈனமான வாதமெண் பதும் போமே. (49)

போமப்பா மண்டலந்தான் கொள்ளும் போது
புகழாகப் பத்தியந்தான் காரு காரு
வாமப்பா வாதமெண் பதினால் வந்த
வல்வினையைச் சொல்லுகிறேன் வகையாய்க் கேளு
தேமப்பா காந்தலொடு குளிர்கள் வீக்கந்
தீவிரமாஞ் சூலைசொறி குட்ட ரோகம்
காமப்பா மண்டைக்குத் திசிவு வாயு
நலமான கழலண்ட வாதம் பாரே (50)

பாரப்பா நடுக்கமுதல் வாந்தி தீரும்
பரிவான இடுப்புவலி பறந்து போகும்
ஆரப்பா கைகாலில் திமிரு வாயு
அப்பனே கைமுடக்கல் கால்மு டக்கல்
வாரப்பா இன்னும்பல வியாதி யாவும்
வளமாகப் பொடிபொடியாய்ப் பறந்து போகும்
காரப்பா இந்தஎண்ணெய் பத்தியங் கேளு
நலமான மிகுதிடமும் பாரு பாரே. (51)

பாரென்று கண்பார்த்து முகத்தைப் பார்த்து
பரிவாக அவனுடைய பலத்தைப் பார்த்து
ஆரென்று வியாதியுட குணத்தைப் பார்த்து
அப்பனே நாடியுட பலமும் பார்த்து
ஏரென்று இதுவறிந்து வைத்தியம் பாரு
என்மகனே குணம்பார்க்கா மூடர் தானும்
நாரென்று நரகில்விழுந் தல்லவன் பாரு
நமன்வந்து துரிதக்கோ பஞ்செய்வானே. (52)

வானென்ற நாடிகளை யாருஞ் சொல்லார்
வளமான என்னந்தி சொன்னூ ரையா
தானென்று பன்னீரா யிரத்திற் றானும்
தலந்தெரியக் குருடனுக்குந் தெரியச் சொன்னேன்
பானென்ற வடமொழியார் காணப் போனார்
பரிவான என்னூல்போற் சொல்லா ரையா
நானென்றும் உள்ளபடி யறிந்து சொன்னேன்
நலமான அறிவுள்ளோர் தேர்வார் பாரே. (53)

வாதத்திற்குத் தைலம்.

பாரான நடுமுடக்கு வாதந் தீர
பரிவான தைலமொன்று சொல்லக் கேளு
ஆரான வேப்பெண்ணெய் படிகால் வாங்கி
அப்பனே வாகைச்சார் படிகால் கூட்டு
வாரான தில்லைப்பால் படிய ரைக்கால்
வளமுருங்கை வேர்ச்சாறு படியரைக்கால்
நாரான கற்கவகை சொல்லக் கேளு
நலமான கரியுப்பு இந்துப் பாச்சே. (54)

இந்தான வெள்ளுள்ளி காயங் கூட்டி
இதமாவி லிங்கவேர் சித்திர மூலம்
வத்தான வசம்புடன் திப் பிலியுங் கூட்டி
வளமாக இவையெல்லா மரைத்துக் கொண்டு
கத்தான அடுப்பேற்றி சுண்டக் காச்சி
கனமாக எடுத்ததனை தடவு நோய்க்கு
அந்தான நிமிசத்தில் வீக்கம் வாங்கும்
ஆனதொரு கடுப்புகளுந் தீர்ந்து போமே. (55)

கரப்பானுக்கு எண்ணெய்.

போமப்பா இதுரண்டுஞ் செய்தி ருந்தால்
பொல்லாத பிணிவாயுவு தீரும் பாரு
வாமப்பா வழியாகச் சொல்லி விட்டேன்
வளமான அசுவினியே அறிந்து செய்வாய்
காமப்பா கரப்பானுந் தீரு தற்குக்
கனமான எண்ணெயொன்று சொல்லக் கேளு
நாமப்பா எண்ணெய்படி முக்கால் வாங்கு
நலமான சின்னிச்சாற் கூந்தற் சாறே. (56)

சாறான செருப்படைச்சாற் கருநொச் சிச்சாற்
சமத்தான சேவுகனார் பூண்டுச் சாறும்
வாறான சங்கஞ்சா றணையின் சாறும்
வளமான வெள்ளெருக்கன் சாறு மிந்தப்
பேறான இவ்வகைக்குப் படியொன் றாக
பிரியமுடன் சேர்த்தொன்றாய்ப் பின்பு மேலாம்
ஆரான சரக்குவகை சொல்லக் கேளு
அப்பனே சீரகந்தான் ரெண்டு கூட்டே. (57)

கூட்டப்பா கடுகுரோ கணியுங் கூட்டு
குணமாய் வாதக்கரப்பான் பட்டை கூட்டு
வாட்டப்பா கண்டங்கத் திரியுங் கூட்டு
வளமாம் ஆனைநெருஞ்சிப் பூண்டுங் கூட்டு
காட்டப்பா வேம்பாடம் அரத்தை சுக்கு
கனமான பரங்கிச்சக் கரையுங் கூட்டு
நாட்டப்பா யிதுவெல்லாந் தூளாய்ப் பண்ணி
நலமாக வகைக்குஅரைப் பலமுஞ் சேரே (58)

சேரடா எண்ணெய்தனிற் கலக்கிக் கொண்டு
சிறப்பாக நேர்வாளம் விராக னென்று
வாரடா நீர்சுண்டக் காய்ச்சிக் கொண்டு
வளமான மெழுகுபதந் தன்னைப் பார்த்து
காரடா இரக்கியதை வடித்துக் கொண்டு
கனகமிதை நாற்பதுநாள் கொள்ளச் சொல்லு
நீரடா பத்தியந்தா னிச்சாப் பத்தியம்
நலமாகத் தீரும்நோய் தன்னைக் கேளே. (59)

கேளப்பா வீக்கமுடன் கொள்ளி சுட்டான்
கெடிதான வாதத்தின் கரப்பா னோடு
வாளப்பா பித்தத்தா லெழுங் கரப்பான்
வளமான செங்கரப்பான் சொறிக ரப்பான்
ஆளப்பா லிங்கப்புத்து யோணிப் புத்து
அப்பனே கிரந்தியொடு கொறுக்கைப் புண்ணும்
நாளப்பா கிரந்தியோ டெழுந்த தெல்லாம்.
நலமான வெடிகிரந்தி யெல்லாம் போமே. (60)

மேகத் தேண்ணெய்.

பேரமப்பா மேகத்தி னெண்ணெய் கேளு
புகழான அத்திப்பால் படிகா லப்பா
வாமப்பா தேங்காய்ப்பால் செவ்வ ள்ளிநீர்
வளமான பனைமரத்து நொங்குத் தண்ணீர்
ஆமப்பா உதியம்பட்டைச் சாறரைக்கால்
அப்பனே ஆவின்பா லாவின் நெய்யும்
காமப்பா எண்ணெய்ப்படிஓன் னரையுஞ் சேர்த்து
கனமான வகைக்குப்படி முக்கால் கூட்டே. (61)

கூட்டப்பா கற்கவகை சொல்லக் கேளு
குணமான முல்லைவேர் குமிழம் வேரு
வாட்டப்பா கொடிவேலி வேருங் கூட்டி
வளமான சாதிக்காய் கிராம்பு ஏலம்
நாட்டப்பா பத்திரியுந் தாளி சந்தான்
நலமாங்கோ ரோசனை சந் தனத்தூள்கூட
ஆட்டப்பா வெட்டிவேர்விலா மிச்சவேரும்
அப்பனேயிவையாவின் பாலா லாட்டே. (62)

ஆட்டியே எண்ணெயைப்பால் தனிற்க ரைத்து
அப்பனே அடுப்பேற்றித் தீயை மூட்டு
காட்டவே மெழுகுபதந் தன்னைப் பார்த்து
கனகமதாய் வடித்ததனைப் பதனம் பண்ணு
மாட்டவே மண்டலந்தான் கரண்டிக் கொள்ள
மகத்தான வங்கபற்பம் போட்டுக் கொள்ளு
நாட்டவே நீரழிவு குட்ட மெல்லாம்
நல்மாக மறைந்துவிடும் சுருக்கில் தானே. (63)

தானான எண்ணெய்க்குப் பத்தியந்தான்
தனதான பெண்ணோடு புகையு மாகா
வானான பரவக்காய் பூச னிக்காய்
வளமான கொள்ளுடனே அகத்திக் கீரை
தேனான எள்ளெண்ணெய் இவைகளாகா
திறமான பத்தியமாய் பதார்த்தங் கூட்டு
ஆனான பெரும்பாண்டுக் கெண்ணெய் கேளு
அப்பனே எள்ளெண்ணெய் படிமுக் காலே. (64)

பெரும் பாண்டுக் கெண்ணெய்.

காலப்பா நாவற்பட்டைச் சாறுபடி முக்கால்
கருவான உதியம்பட்டைச் சாறுபடி முக்கால்
வாலப்பா அத்திப்பட்டைச் சாறுபடி முக்கால்
வளமான நெல்லிக்காய்ச் சாறுபடிமுக்கால்
மேலப்பா ஆலம்பட்டைச் சாறுபடி முக்கால்
மிருபூவ ரசம்பட்டைச் சாறுபடி முக்கால்
மாலப்பா கரிப்பாணின்சாறுபடி முக்கால்
மனமான கற்கவகை சொல்லக் கேளே. (65)

வேறு.

கேளப்பா பலமுக்கால் தாளி சந்தான்
கெடியான சாதிக்கா யேலங் கிராம்பு
வாளப்பா அரத்தையொடு மதுரங் கூட்டு
வளமான நிலப்பனையின் கிழங்கு கூட்டு
ஆளப்பா வகைக்குவகை பலங்கல் வத்தில்
அக்கிட்டுத் தென்னங்காய்ப் பாலா லரட்டு
காளப்பா எண்ணெய்தனிற் கரைத்துக் கொண்டு
கருவாக அடுப்பேற்றித் தீயை மூட்டே. (66)

மூடையிலே மெழுகுபதம் வருதல் கண்டு
முழித்திருந்து கைபாகம் பார்த்தி றக்கு
வாடையிலே எண்ணெய்தனை யிறக்கிக் கொண்டு
வளமாக வடுகனுக்குப் பூசை பண்ணு
காடையிலே கரண்டிநிறை கொண்டிட் டாக்காற்
கனமான பெரும்பாண்டு ரத்தப் பாண்டு
நாடையிலே வெள்ளையொடு நீர்ச்சுருக்கு
நலமான நீர்சதையி னடைப்பும் போமே. (67)

போமென்று தயிர்மோர்நெய் பாலுங்கூட்டு
புகழான உப்பதனை வறுத்துக் கூட்டு
ஆமென்று மற்றதெல்லாந் தள்ளிப் போடு
அப்பனே எண்ணெயுட மருத்துவந்தான்
வாமென்ற புடத்தைல மகிமை கேளு
வளமான எட்டிவிரைத் தைலஞ் சொல்வேன்
நாமென்ற எட்டிவித்து படிதான் நாலி
நலமான புங்கம் வித்து நாலுசேரே. (68)

### புடத் தைலம்.

சேரென்ற வில்வப் பழம்நூறு கூட்டி
ஜெய்மாக இவைமூன்றும் புடத்தைலம் வாங்கி
வாரென்ற மனிதருக்கு கொடுத்தா யானல்
வளர்குட்ட முடன்பாண்டு வீக்கந்தீரும்
ஆரென்ற தலைக்குத்தான் தேய்த்து மூழ்கு
அமைந்து பித்த சூடுதிர்ந்த மயிர்முளைக்கும்
நாரென்ற சொறிசிரங்கு அரையாப்புப் புண்ணும்
நலமாக ஓடிவிடும் நவின் றிட்டேனே. (69)

### புங்கவிரைத் தைலம்.

நவிலவே இன்னுமொரு தைலங் கேளு
நலமான புங்கவித்துத் தைலஞ் சொல்வேன்
அவிலவே புங்கவித்து படிதா னென்று
அப்பனே அழிஞ்சுவித்துப் படிதா னென்று
கவிலவே முல்லைவேர் வீசை ரெண்டு
கனமான குமரிவேர் வீசை யெட்டு
மயிலவே யிதுவெல்லாம் பாண்டத் திட்டு
மகத்தான குழித்தைலந் தன்னை வாங்கே. (70)

வாங்கியே கடுகளவு உள்ளுக் கியந்து
வளமாக மேலுக்கும் பூசுவாயீ
ஆங்கவே நரைதிரைக ளிதினற் போகும்
அப்பனே காயமது இறுகிப் போகும்
தாங்கவே பாண்டுடனே மேகம் போகும்
தலமாக இத்தனையு மிதனற் றீரும்
சாங்கவே இன்னுமொரு தைலஞ் சொல்வேன்
சமத்தான அறுகன்வேர்த் தைலங்கேளே. (71)

கேளப்பா அறுகின்வேர் வீசை யெட்டு
கெடியான முத்தமது வீசையெட்டு
ஆளப்பா புங்கன்வேர் வீசை யெட்டு
அப்பனே இதுவெல்லாம் பாண்டத் திட்டு
வாளப்பா குளித்தைலந் தன்னை வாங்கி
வளமாக தைலமதைப் பதனம் பண்ணு
நாளப்பா உள்ளுக்குக் காசி டைகொள்
நற்சிரசிற் றேய்த்து நன்ருய் மூழ்குவாயே. (72)

முழுகிடவே தீருமது பித்தப் பாண்டு
முக்கியமுள்ள பித்தவெட்டை பித்தச்சூடு
அழுகிடவே உடம்பெரிவு கைகால் காந்தல்
அப்பனே நெஞ்செரிவு மூக்கெ ரிச்சல்
பழுகிடவே கபாலத்தின் மண்டைக்குத்து
பதமான அக்கினியா மாந்தந்தீரும்
வழுகிடவே புளிபுகையு மாகா தப்பா
வளமாகப் பத்தியத்தை நினைவாய்ச் செய்யே. (73)

இரணங்களுக்குத் தைலம்.

செய்யப்பா ஆறுத ரணத்துக் கெல்லாஞ்
செயமான தைலமொன்று சொல்லக் கேளு
வையப்பா சங்கம்வேர் வீசை ரெண்டு
வளமான பூவரசம் பட்டை ரெண்டு
கையப்பா சிவன்வேம்பு வீசை ரெண்டு
கனமான வாலுளுவை வீசை ரெண்டு
நையப்பா இதுவெல்லாம் நறுக்கி கொண்டு
நலமான பாண்டத்திற் போட்டிடாயே. (74)

போடப்பா குழித்தைல மாக வாங்கி
புகழான சீசாவிற் பதனம் பண்ணு
ஆடப்பா மனிதருக்கு உள்ளுக் கீய
அப்பனே புண்புரைக ளாறுப் புண்ணும்
வாடப்பா பதினெட்டிற் பிறந்தரோகம்
வளமாகப் பறந்தோடிப் போகும்பாரு
நாடப்பா ரணத்தின்மேற் றைலம் போடு
நலமாகப் பறந்துவிடும் புண்கள் தானே. (75)

சயத் தைலம்.

தானான ரணத்தைலஞ் சொன்னே னப்பா
தயவாக சயத்துக்குத் தைலங் கேளு
தேனான செம்முள்ளிவேர் வீசை ரெண்டு
செயமான சங்கம்வேர் வீசை ரெண்டு
ஆனான ஆடாதொடை மூலிவேரும்
அப்பனே வீசையதில் ரெண்டு கூட்டு
வானான இதுமூன்றுங் குழித்தைலம் வாங்கி
வளமான தைலத்தைப் பதனம் பண்ணே. (76)

பண்ணப்பா பணவிடைதான் கொள்ளச் சொல்லு
யரிவாக இருபொழுது உள்ளுக் கேற்று
சண்ணப்பா சயரோகஞ் சிலத்ம ரோகஞ்
சமத்தான யீளையோடு சுவாச காசம்
மண்ணப்பா பாண்டுவிடு மிருமல் ரெத்தம்
மகத்தான கொளுகொளுப்பு வேற்சு வாசங்
கண்ணப்பா கண்காணு தோடிப் போகுங்
கனமான மேகத்தா லெழுந்த தாச்சே. (77)

மூலச்சூட்டுக்குத் தைலம்.

ஆர்சப்பா சயத்தினுட தைலஞ் சொன்னேன்
அப்பனே மூலச்சூ டெல்லாம் போக
வாச்சப்பா தைலமொன்று சொல்லக் கேளு
வளமான தைலமடா எவருஞ் செல்லார்
மாச்சப்பா மிளகரனை முக்கத்தாரி
மகத்தான தென்னைவேர் பனையின் வேரும்
காச்சப்பா கையானுங் கொழிஞ்சி வேரும்
கனமான இலந்தைவேர் முசட்டை வேரே. (78)

வேரேகிழ் காய்நெல்லி சித்தா முட்டி
மேலான நெல்லிப்பட்டை யானைப்பட்டை
காரப்பா இதுவெல்லாம் விசை யொன்று
கனமான பாண்டத்தி லிட்டுக் கொண்டு
ஆரப்பா குழித்தைலந் தன்னை வாங்கி
அப்பனே அடக்கமதாய்ப் பதனம் பண்ணி
வாரப்பா வேளைகா சிடைதா னீய
வளமான மூலமெல்லாம் பறந்து போமே. (79)

போமப்பா புடத்தைப் பெருமை சொன்னேன்
புகழான சூரணத்தின் மகிமை கேளு
ஆமப்பா வாதமெல்லா மொழிந்து போக
அப்பனே சூரணந்தா னென்று சொல்வேன்
வாமப்பா சரக்கொன்னை மாவி லிங்கம்
வளமான கொடிவேலி கண்டங் கத்திரி
காமப்பா வாதத்தின் கரப்பன் பட்டை
கனமான தூதுவளை சங்கம் வேரே. (80)

வேரான வெள்ளெருக்கன் வேருங் கூட்டு
விதமாக இதுவகைக்குப் பலந்தா னைந்து
ஆரான பூண்டுடனே காயஞ் சுக்கு
அப்பனே இந்துப்பு வளைய லுப்பு
காரான கம்பியுப்பு கல்லுப் போடே
கனமான உப்பெல்லாஞ் சுத்தி செய்து
வீரான வேரெல்லாந் தூளாய்ப் பண்ணி
விதமான கடைச்சரக்கைப் பொடிதான் பண்ணே. (81)

பண்ணவே இரண்டுமொன்றாய்க் கலந்து கொண்டு
பண்பான சூரணத்தைப் பதனம் பண்ணி
கண்ணவே வெருகடி தூள் உள்ளுக் கேற்று
கனமான வாதத்தால் வந்த பீடை
அண்ணவே சூரணத்தைக் கொண்ட போதே
அப்பனே கண்காணு தோடிப் போகும்
வண்ணவே வாதத்தின் சூர ணத்தை
வளமான சயதுக்குக் கொடுக்கக் கேளே. (82)

கேளப்பா செம்முள்ளி ஆடா தோடை
கெடியான சங்கோடு மீய வேரும்
வாளப்பா திரிகடுகு ஏலத் தோடு
வளமான கண்டங்கத் திரிய ரத்தை
நாளப்பா கடுக்காயுஞ் சித்திர மூலம்
நலமான கையானுந் தாளி சந்தான்
ஆளப்பா இதுவெல்லாம் பலந்தா னென்று
அப்பனே கல்லுரலிற் றாள தாக்கே. (83)

தாக்கென்ற சூரணத்தை வடித்துக் கொண்டு
தனதாகச் சீனியிலே மூன்று சேரு
வாக்கென்ற சூதமொடு தாள க்ந்தான்
வளமான பற்பத்தி லெதுவா னாலும்
சாக்கென்ற பணவிடைதான் வைத்துக் கொள்ளு
சயமீளை மந்தார காசப் போகும்
ஆக்கென்ற பத்தியந்தான் புளிபுகை பெண்
அகற்றுயரைக் கீரையொடு துவரை தானே. (84)

தாளிச பத்திரி சூரணம்

தானான கடல்மச்சம் வற்றல் கூட்டு
தனதாக மற்றதெல்லா மாகா தப்பா
தானான இன்னுமொரு சூர ணங்கேள்
தாளீசப் பத்திரிச்சூ ரணந்தான் சொல்வேன்
கானான பலமொன்று தாளி சந்தான்
கருத்தான திரிகடுகு திரிப லாதி
ஆனான ஏலமொடு கிராம்பு பத்திரி
ஆகயிவை யாவும்பல மரைதான் கூட்டே (85)

கூட்டியே யிடித்ததனை வடித்துக் கொண்டு
கூறுகச் சீனியதில் மூன்றி லொன்று
வாட்டவே வெருகடிதூள் உள்ளிற் கொள்ள
வளமான மூலத்தின் கடுப்பு ரெத்தம்
மாட்டவே மேகமொடு மூல வாய்வு
மகத்தான வரச்சியொடு ரெத்தப் பாண்டு
நாட்டவே நீர்க்கடுப்புக் கல்ல டைப்பு
நலமாகும் மேகவெள்ளை பறந்து போமே. (86)

பித்தச் சூரணம்.

போமப்பா இன்னுமொரு சூர ணங்கேள்
புகழான பித்தத்தின் சூர ணந்தான்
வாமப்பா ஆவாரம் பட்டை வேரும்
வளமாம்வே ரிலைத்தாமரை கிழ்காய் நெல்லி
ஆமப்பா கூவிளம்வேர் சித்தா முட்டி
அப்பனே இலவன்வேர் வேலிப் பாசி
காமப்பா கரிப்பயறு நன்னாரி வேர்
கனமான விலாமிச்ச வேருங் கூட்டே. (87)

கூட்டப்பா எலுமிச்சை வேருங் கூட்டு
கூராக இதுவகைக்குப் பலந்தான் ரெண்டு
ஆட்டப்பா கடுக்காயும் ஏல மாஞ்சில்
அப்பனே சந்தனத்தூள் தேவ தாரம்
வாட்டப்பா இதுவெல்லா மரைப் பலந்தான்
வகையாக இடித்ததனை வடித்துக் கொண்டு
காட்டப்பா சீனிசீ ரகமுங் கூட்டு
காசினியிற் சூரணத்தின் மகிமை தானே. (88)

தானான சூரணத்தை இருபோ துண்ண
தனதான பித்தெரிவு கண் புகைச்சல்
வானான பித்தத்தா லெழுந்த தெல்லாம்
வளமாக மாண்டுவிட வகையுஞ் சொன்னேன்
கானான பீனிசங்க ளெல்லாம் போக
கனமான சூரணந்தா னென்று கேளு
தேனான கடுக்காயுங் கடுகு ரோகணி
செண்பகப்பூ பெருமருந்து இவையுந் தானே. (89)

பீனிசத்துக்குச் சூரணம்.

தானென்ற திரிகடுகு செங்கத் தாரி
தனதான கொடுவேலி கண்டங் கத்திரி
வேனென்ற சங்கவேர் சீரகந்தான் ரெண்டு
விதமான யிதுவெல்லாம் பலமொன்றாக
கோனென்ற கல்லுரலி லிடித்துக் கொண்டு
குணமாக எடுத்ததனை வைத்தே தானுங்
நானென்று வெருகடிது ளிருபோ தாக
நலமாக ஏழுநாள் கொள்ளு கொள்ளே. (90)

கொள்ளப்பா மேகசூலை பீனி சங்கள்
கொடிதான நாசிரத்தம் நாசி நாற்றம்
விள்ளப்பா உடம்பெல்லாந் தினவு குட்டம்
விதமான பொருமலுடன் விம்மல் விக்கல்
கள்ளப்பா காதிலுள்ளே சீழு ரத்தம்
கனமான பீனிசங்க ளெல்லாம் போகும்
அள்ளப்பா பீனிசச் சூரணந்தான் சொன்னேன்
அப்பனே இன்னுமொன்று அருளுவேனே. (91)

அருளுவேன் மூலமொன் பதமே போக
அழகுசண்ட மாருதச்சூ ரணமுஞ் சொல்வேன்
வருளவே கொடிவேலி சுக்குங் கூட்டி
வளமான மிளகரணை முத்தக் காசு
கருளவே கடுக்காயுங் கடுக்காய்ப் பூவுங்
கனமான புளியாரை சித்த ரத்தை
மருளவே குங்குமப்பூ சாதிக் காயும்
மகத்தான கொழிஞ்சிவேர் பிரண்டை வேரே. (92)

வேரான சரக்கொன்னை வேரும் வாங்கு
வேதாந்தப் பச்சையொடு மாவேர்ப் பட்டை
ஆரான இதுவெல்லா முலர்த்தித் தூளாய்
அப்பனே வகைக்குப்பலம் ரெண்டு வாங்கி
வாரான திதுவெல்லா மெடுத்துக் கொண்டு
வளமாகச் சீனியதிற் கலந்து கொள்ளு
நாரான இருபோது மண்டலங்கொள்
நலமான மூலமொன் பதுவும் போமே. (93)

வல்லாரைக் கிருதம்.

போமப்பா சூரணத்தின் மகத்துவஞ் சொன்னேன்
புகழாகக் கிருதநெய்யின் வகையைக் கேளு
வாமப்பா வல்லாரைக் கிருதந் தானும்
வளமான வல்லாரைப் படிதா னென்று
நாமப்பா ஆவரைச்சார் படிதா னென்று
நலமான கோவைச்சார் படிதா னென்று
காமப்பா தக்காளிப் படிதா னென்று
கனமான ஆவின்நெய் படிதா னென்றே. (94)

ஒன்றான ஆவின்பால் படிதா னென்று
உத்தமனே கற்கவகை சொல்லக் கேளு
கன்றான திரிபலைசா திக்காய் கிராம்பு
கல்வத்தி லாவின்பால் தன்னு லாட்டி
வன்றான நெய்தனிலே கலக்கிக் கொண்டு
வளமாக அடுபேற்றித் தீயை மூட்டிக்
கன்றான நீர்சுண்டிக் கிருத மாகும்
கருதியசர்க் கரைபலமி ரண்டு போடே. (95)

போடப்பா அடிபற்றுக் கிண்டு கிண்டு
புகழான கிருதத்தைப் பதனம் பண்ணு
வாடப்பா பூசித்து மனித ருக்கு
வளமாகக் கரண்டிநிறை யிருபோ துண்ண
ஆடப்பா கிரந்தியொடு மேக வூரல்
அப்பனே சொரிசிரங்கு வெள்ளை ரத்தம்
நாடப்பா சதையடைப்பு நீர்க்கட் டெல்லாம்
நலமாக ஓடிவிடும் நவிலொண் ணாதே. (96)

முயல் நெய்.

ஒண்ணன நெய்யொன்று சொல்லக் கேளு
உத்தமனே முயல்ரெத்தம் நெய்யைச் சொல்வேன்
வன்னன முயல்ரெத்த மரைப்ப டிதான்
வளமான வெள்ளாட்டு நெய்யும் வாங்கி
கண்ணன தூதுளைச்சார் படிதா னென்று
கருத்தான இஞ்சிச்சார் படிதா னென்று
தன்னன யீயச்சார் படிதா னென்று
சரியான சங்கஞ்சார் படிதா னென்றே. (97)

வாங்கவே கற்கவகை சொல்லக் கேளு
வளமான ஏலமொடு தேக்கு வங்கம்
ஆங்கவே கற்கடக சிங்கி யோடு
அப்பனே வாலுளுவை கண்டங் கத்திரி
தாங்கவே யிதுவகைக்குப் பலந்தான் வாங்கி
சரியாக அரைத்ததிலே கரைத்துக் கொண்டு
சாங்கவே அடுப்பேற்றி சுண்டக் காய்ச்சி
சமத்தான நெய்யதனை வடித்துக் கொள்ளே. (98)

கொள்ளவே பூசித்து இருபோ துண்ணு
குருவான சயமெட்டும் பறந்து போகும்
விள்ளவே சுவாசமொடு காச மாந்தம்
விதமான இருமலொடு யீளை விக்கல்
கள்ளவே கொளுகொளுப்பு மேற்சு வாசம்
கனமான சுரமுடனே பிணிக ளெல்லாம்
மள்ளவே கடல்கடந்து ஓடிப் போகும்
மகத்தான முசல்நெய்யின் பெருமை தானே (99)

பிரமலேகியம்

தானன யின்னுமொரு பிரம னென்ற
தனதான லேகியத்தைச் சொல்லக் கேளு
கோனன கன்னரி கத்தைச் சூரி
கொன்னைசங்கங் குப்பியொடு மூலங் கூட்டி
கானன செம்முள்ளி ஆணை நெருஞ்சி
கனமான மேனியோடு முக்கத் தாரி
ஆனன கூவிளம்வேர் குன்றி வேரும்
அப்பனே செவ்வள்ளி நெருஞ்சில் செப்பே. (100)

செப்பாத கையான்பொற் றலையுங் கூட்டு
செயலான மருதம்வேர் சின்னி வேரும்
வப்பாத ஆகாசக் கருட ன் கூட்டு
வளமாம் விஷ்ணுமூலி கீழ்க்காய் நெல்லி
கப்பாத கரந்தையொடு பொன்னுங் காணி
கனமான இலந்தைவேர் முசுமு சுக்கை
அப்பாத கோவையுட கிழங்கு புங்கு
அப்பனே விளாம்பிஞ்சின் விலாமிச் சென்றே (101)

மிச்சென்ற அத்திப்பிஞ்சு இலவம் பிஞ்சு
மிகுந்ததொரு கொன்னைப்பிஞ்சு தென்னம் பிஞ்சு
வச்சென்ற ஆவாரைப் பிஞ்சு கூட்டு
வளமான நிலப்பனையின் கிழங்கு கூட்டு
நச்சென்ற கொடுவேலி குமரி கூட்டு
நல்மான கூந்தலொடு வேலிப் பாசி
கச்சென்ற இவையெல்லாம் ரவியு லர்த்தி
கனமாக வகைபலந்தான் மூன்று வாங்கே. (102)

வாங்கியே யிடித்ததனை வடித்துக் கொண்டு
வளமான கடுக்காயுங் கடுக்காய்ப் பிஞ்சும்
கூங்கியே சாதிக்கா யேலங் கிராம்பு
குங்குமப்பூ பத்திரியுஞ் செண்ப கப்பூ
ஆங்கியே திரிகடுகு யிவையெல் லாந்தான்
அப்பனே பலமொன்று தூளே பண்ணு
தாங்கியே பனைவெல்லம் பாகு செய்து
தளராத சூரணத்தைத் தூவிக் கிண்டே. (103)

கிண்டவே மெழுகுபோற் பதந்தான் பாரு
கெடியான லேகியத்தை யிறக்கி வைத்து
வண்டவே பூசித்துப் பரணி வைத்து
வளமாக பாக்களவு கொள்வா யாகில்
நண்டவே பாண்டுடனே காசஞ் சூலை
நலமான வெட்டையுட னிருமல் ரத்தங்
கண்டவே கன்னம்விப் புருதி சூலை
கனக்கண்ட மாலைவெண் குட்டம் போமே. (104)

போமப்பா கிராணியோடு மூலங் குட்டம்
புகழான கிரந்திஅரை யாப்புப் புண்ணும்
வாமப்பா வயிற்றுவலி வாத ரோகம்
வழிகாணு தோடுமடா வரைந்தேன் பாரு
காமப்பா பிரமலே கியங்கள் சொன்னேன்
கருமநோய் லேகியத்தைக் கருதிக் கேளு
சேமப்பா கொடுவேலி வெள் ளறுகு
சிவன்வேம்பு சங்கங்குப்பி முத்தக் காசே. (105)

கருமநோய்க்கு லேகியம்.

குப்பென்ற கூவிளவேர் சின்னி வேரும்
குருவான குன்றிவேர் நத்தைச் சூரி
அப்பென்ற கருவேலங் காய்பொற் கையான்
அறிவான கரப்பனொடு பரங்கிச் சக்கை
நப்பென்ற நாயுருவி நன்னாரி கொத்தான்
நலமான கண்டங்கத்திரி சங்கு மூலம்
தப்பென்ற தழுதாளை கொன்றை மின்னி
தனதான தகரைவிலா மிச்சை வேரே. (106)

வேரென்ற அமுக்கிராச் செடியின் வேரும்
வேதாந்தத் திருமூலி சிவமூ லிவேர்
ஆரென்ற பூவரசு வேரின் பட்டை
அப்பனே கொள்ளுக்காய் வேளை மூலம்
காரென்ற தூதுவளை புங்கம் வேரும்
கனமான பொற்கையான் வேருங் கூட்டு
நாரென்ற பாதிரியுங் குருந்து அல்லி
காவல்அத்தி ஆலின்விழு தாகும் பாரே. (107)

விழுதான இலுப்பைவெள் ளரியின் வேரும்
மிக்கநா ரத்தையொடு துளசி வேரும்
தழுதான பிசினிவகை சொல்லக் கேளு
சமத்தான புங்கோடு அத்தி மாவு
மழுதான கருவேலா லரசுங் கூட்டு
மகத்தான வேம்புகொன்றைப் பிசினுங் கூட்டு
தொழுதான மூலிவகை யுலர்த்திக் கொண்டு
சுகமாக பலமூன்று இடித்துத் தானே. (108)

தானான பிசினிவகை உலர்த்திக் கொண்டு
தப்பாமற் பலமரைதா னிடித்துக் கூட்டு
வானான பிசினியுட பாகு செய்து
வளமாகச் சூரணத்தைக் கொட்டிக் கிண்டி
ஆனான கடைச்சரக்கு சொல்லக் கேளு
அப்பனே திரிகடுகு திரிப லாதி
மானான சாதிக்கா யேலங் கிராம்பு
வாலுளுவை லவங்கப்பட்டை வகையாய்த் தானே. ()

தானென்ற பலமரைதா னிடித்துத் தூவி
தப்பாமற் மெழுகுபதந் தன்னைப் பார்த்து
வானென்றே யிறக்கியதைப் பரணில் வைத்து
மாலையிலுங் காலைபாக் களவு கொள்ளு
நானென்ற கடுகுபுளி புகையைத் தள்ளு
நலமான எண்ணெய்யொடு பெண்ணுந் தள்ளு
ஆனென்ற கருமத்தால் மேக ரோக
அஸ்திவெட்டை காலெரிவு மின்னுமாமே. (110)

ஆமப்பா வயிற்றுவலி குன்ம மெட்டும்
அரியதொரு சூலைபதி னெட்டும் போகும்
காமப்பா கண்டமாலை பவுத்தி ரங்கள்
காணும லோடுமடா கரும நோய்தான்
வாமப்பா அவரவர்தன் கருமத் தாலே
வளமாகச் சித்தித்த கரும நோய்கள்
நாமப்பா அத்தனையு மிதனுற் றீரும்
நலமான வடமொழிதா னின்னூல் பாரே. (111)

நூல் விபரம்.

பாரப்பா சீடர்களே உங்க ளுக்குப்
பரிவாக யானறிந்து பாடி னேன்பார்
காரப்பா நிகண்டு முந்நூ றிற் றுனுங்
காட்டினேன் யான்றிறந்து சுழிவா யப்பா
வாரப்பா அறுபத்து நாலு சித்தும்
வளமாக முடித்துகலைக் கியானம் சொன்னேன்
ஆரப்பா அறிவார்கள் நிகண்டின் போக்கு
ஆதவன்போல் திரிமூலங் காணுங்காணே. (112)

காணப்பா ஆயிரத்தைப் பார்த்தா யானுற்
    கண்ணுடி முகம்போன்ற வயித்திய மாகும்
ஆனப்பா என்னூறில் விரித்துச் சொன்னேன்
    அப்பனே நூல்கிடைத்தா லெல்லாஞ் சித்தி
வானப்பா ஐந்நூறில் சகல சித்தும்
    வளமாகச் சொல்லிவிட்டேன் மகிழ்வாய்ப் பாரு
மாணப்பா மடையருக்கு நூல்கிட் டாது
    மகத்தான சிவயோகி காண்பான் பாரே. (113)

பாரப்பா ஆயிரத்து இருநூற்ருேடு
    பணப்பாகக் கருக்கிடைமுந் நூறிற் ரோணும்
ஆரப்பா அறிவார்களின்னு லேத்தான்
    அப்பனே முழுதுமிதைப் பார்த்தோர் முன்பு
மாரப்பா வைத்தியனு மெதிர்க்க மாட்டான்
    மகத்தான பிரமனடா மேலோ னுவான்
காரப்பா கருவாலி என்னூல் பார்ப்பான்
    கருத்தறியாக் கழுதைகளுங் காணுர் தானே. (114)

தானப்பா கருத்தறிய வேணு மென்ருல்
    தனதான முப்பூவின் கருவைப் பாரு
வானப்பா சாகாம லிருக்க வென்ருல்
    வளமான வாசியுட வளப்பங் காணு
கானப்பா அமுதமதைக் கொள்ள வென்ருற்
    கண்மணியே சுழிமுனைகண் ணேட்டம் பாரு
மானப்பா மதியமுதந் தன்னைக் கொள்ளு
    மகத்தாஞ்சஞ் சீவியதன் பூட்டைக் காணே. (115)

காணப்பா இருநூறுந் திறவு கோல்தான்
    கனமான ஆயிரத்தெட் டண்ட மாச்சு
வாணப்பா வழலையுட வளப்பங் கண்டால்
    வளமான மறைப்பெல்லாங் கண்ணிற் காணும்
மாணப்பா மகத்தான சித்தன் காண்பான்
    மற்ருேர்கள் மடையரவர் காணுர்பாரு
ஆணப்பா ஆதியந்தங் கோச பீஜம்
    அப்பனே அடிமுடியு மண்ட மாச்சே. (116)

ஆச்சப்பா ஐந்துருவு மண்ட மாச்சு
அகாய வெளியாச்சு அந்த மாச்சு
மாச்சப்பா மதியமுதம் விந்து வாச்சு
மகத்தான கண்ணிலொளி அதனு லாச்சு
காச்சென்ற கற்பம்வல் லாரை யாச்சு
கண்மணியே உந்தியெனுங் கமல மாச்சு
நாச்சப்பா நந்தியென்ற அண்ட மாச்சு
நாதாந்தச் சித்தருட மூலங் காணே. (117)

காணப்பா சிவதீட்சை சத்தி தீட்சை
கனமான தீட்சையெல்லா முப்பூ வாச்சு
ஆணப்பா வழலையென்ற அண்ட முப்பூ
அப்பனே இதனலே எல்லா மாச்சு
பேணப்பா இவ்விதங்க ளான மூலம்
பிர்மா விஷ்ணு ருத்திர னமூலம்
வாணப்பா மண்டையென்ற கபாலந் தன்னை
மகத்தான சிவனெடுத்து அமுதுண் டாரே. (118)

உண்ணப்பா யிதுவிட்டா லெல்லாம் போச்சு
உத்தமனே காயாதி கற்ப மில்லை
வண்ணப்பா காயென்ன கபாலந் தாண்டா
வளமான சற்குருதான் கபால முத்து
மண்ணப்பா அப்பாச்சு உப்பு மாச்சு
மகத்தான அண்டமெனும் பிண்டமாச்சு
கண்ணப்பா கல்வியென்ற அறிவு மாச்சு
கண்மணியே யோகமுடன் ஞான மாச்சே. (119)

தைலம்.

ஆச்சப்பா சமாதிநிஷ்டை மார்க்கஞ் சொன்னேன்
அப்பனே தைலத்தின் மார்க்கங் கேளு
போச்சப்பா மும்மூர்த்தி தைலஞ் சொல்வேன்
புங்கம்வேர் சாறுமொரு படியெ டுத்தும்
காச்சப்பா பாதிவேர் பட்டைச் சாறுங்
கனமான கோவையுட கிழங்குச் சாறும்
நாச்சப்பா வாழைக்கட்டை எருக்கன் சாறும்
நல்லவில்வ வேர்வகைக்குப் படிதான் சாரே. (120)

சாரப்பா நெல்லிச்சார் வல்லா ரைச்சார்
சதாசிவன்றன் மூலியுட தண்டுச் சாரும்
ஆரப்பா கற்பூர வல்லிச் சாரும்
அப்பனே சங்குச்சார் செருப் படைச்சார்
நாரப்பா நற்றுளசி மாசிப் பத்திரி
நலமான சாருடனே கையான் சாரும்
வாரப்பா குமரிச்சார் கவுதும் பைச்சார்
மாசில்லா தெல்லாமொன் றாகக் கூட்டே. (121)

தீட்டப்பா இதுவெல்லாம் படிதா னென்று
சிற்றேரண் டத்தெண்ணெய் படிதா னென்று
வாட்டப்பா கற்கமூலி விபரஞ் சொல்வேன்
வளமாம்கீழ்க் காய்நெல்லி வேருஞ் சேர்த்து
ஆட்டப்பா சந்தனத்தூள் கடகஞ் சிங்கி
அப்பனே வால்மிளகு சீரகந் தான்
நாட்டப்பா சாதிக்கா யேலங் கிராம்பு
நலமான லவங்கப்பட்டை மாச்சக் காயே. (122)

காயோடு இதுவெல்லம் பலந்தா னென்று
கனமான ஆவின்பால் தன்னுலாட்டி
தாயோடு யிவையாவுங் கலக்கிக் கொண்டு
தலமாக அடுப்பேற்றித் தீயை மூட்டி
மாயோடு மெழுகுபத மாகும் போது
மயங்காமற் தைலத்தை வாங்கிக் கொள்ளு
ஆயோடு நெற்பானை தன்னில் வைத்து
அப்பனே எழுநாட்சென் றெடுத்துப் பாரே. (123)

பாரப்பா தைலத்தை முழுகினுக்காற்
பதமான கிழவனிளங் குமர னுவான்
ஆரப்பா நரைதிரையு மறைந்து போகும்
அப்பனே சூலையொடு ரணங்கள்கட்டி
நாரப்பா கண்ணில்வந்த வியாதி யெல்லாம்
நலமாகப் பொடிப்பொடியாய்ப் பறந்து போகும்
காரப்பா பாண்டுகர்ம மூலம் போகும்
கைகடந்த மூலச்சூ டெல்லாம் போமே. (224)

போமம்பா கண்டாவிழ்தஞ் சொல்லக் கேளு
புகழான கலங்கொம்பு ஆனைக் கொம்பு
ஈமப்பா காண்டா மிருகத்தின் கொம்பு
நலமான அதிமதுரம் அக்கிராக் காரம்
ஆமப்பா கோஷ்டமுடன் ஏலங் கிராம்பு
அப்பனே தும்பராஷ் டகமும் சேரு
வாமப்பா இவையெல்லாம் சமனதாக
வளமான திப்பிலிமா துளம்வி ரையே. (125)

விரைவான பொரியுடனே சீனி கூட்டு
விதமான தேனிலே குழப்பிக் கொண்டு
அரையான நாவிலே தீத்தி னுக்கால்
அன்பான தோஷமுடன் குளுமை சன்னி
கரையான தோஷமெல்லாங் கெதிகெட் டோடுங்
கனமான நோயெல்லா மகன்று போகும்
நரையான நவசுரங்க ளொன்ப தும்போம்
நலமான தாகமுடன் வரட்சி போமே. (126)

போமப்பா என்னைப்போ லார்தான் சொன்னார்
புகழான யென்னந்தி யருளி னாலே
வாமப்பா கணக்காக மார்க்கஞ் சொன்னேன்
கண்மணியே அறிவுள்ளோர் தேர்வா ரையா
காமப்பா ஆயிரத்தி யிருநூ று போலே
வளமாக யார்சொல்வார் வகுத்துப் பாரு
நாமப்பா என்னந்தி யருளினாலே
நலஞ்சொன்னேன் அசுவனியே நன்றாய்க் கேளே. (127)

கேளப்பா நெய்யுடனே கிருதஞ் சொன்னேன்
கெடியான ஞானமொடு வேதஞ் சொன்னேன்
வாளப்பா வழிதுரையாய்க் காணச் சொன்னேன்
வளமான அப்புடனே உப்புஞ் சொன்னேன்
கானப்பா என்னெய்யுடன் தைலஞ் சொன்னேன்
கண்மணியே முப்பூவின் விபரஞ் சொன்னேன்
ஆளப்பா சகலமுமே தெரியச் சொன்னேன்
அப்பனே மாத்திரையுஞ் சொன்னேன் பாரே. (128)

சொன்னதொரு லேகியங்கள் கிருதஞ் சொன்னேன்
சொற்பரிய தைலஞ்சக் கரங்கள் சொன்னேன்
வன்னமுடன் யோகமுறும் வாசி சொன்னேன்
வளமான தேவதைகள் வசியஞ் சொன்னேன்
கன்னதொரு ஊமையெழுத் ததுவுஞ் சொன்னேன்
கனமான வழலைமுப்பூ கருவுஞ் சொன்னேன்
அன்னமுடன் யோகநிஷ்டை விபரஞ் சொன்னேன்
அப்பவே இனிமேலுஞ் சொல்லக் கேளே. (129)

### தோஷசுரக் கஷாயம்.

கேளப்பா கஷாயத்தின் பெருமை கேளு
கெடியான முத்தமொடு அக்கிராக் காரம்
வாளப்பா அதிமதுரங் கோஷ்டம் ஏலம்
வளமான லவங்கமொடு சித்திர மூலம்
நாளப்பா திரிகடுகு திரிப லாதி
நலமாம்வெப் பாலைசி ரகந்தான் ரெண்டு
ஆளப்பா மிளகதனைப் பற்பம் பண்ணி
அப்பனே சீரகத்தைப் பொரிய வையே. (130)

வையப்பா மற்றதெல்லாம் பொடித்துக் கொண்டு
வளமாகச் சலமொன்று படியே வாரு
அய்யப்பா எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
அப்பனே நோய்க்குமுப் பொழுதும் வாரு
கையப்பா கைவிட்ட தோஷ மெல்லாங்
கைகடந்த சுரங்களுடன் தோஷம் போகும்
மெய்யப்பா எலும்புரத்த மாமி சத்தின்
மேல்வந்த அறுபத்து நாலும் போமே. (131)

### மேகத்திற்குக் கியாழம்

போமப்பா யின்னுமொரு கியாழஞ் சொல்வேன்
புகழான கியாழமடா யாருஞ் சொல்லார்
வாமப்பா வாலுளுவை சிவனார் வேம்பு
வளமான கண்டங்கத் திரிய ரத்தை
நாமப்பா நஞ்சுமுறி கழுதைப் பாலும்
நலமான திரிகடுகு வசம்பு உள்ளி
காமப்பா கொடுவேலி கஞ்சாங் கோரை
கனமான தான்றிக்காய் மாச்சக் காயே. (132)

காயப்பா மஞ்சிட்டி சாதிக் காயும்
கனமான லவங்கமொடு பறங்கிப் பட்டை
வாயப்பா வால்மிளகு சங்கம் பட்டை
வளமான நாயுருவி புளியம் பட்டை
நேயப்பா தூதுவளை முத்தக் காசும்
நேயமுடன் பேய்ப்புடலும் வில்வ வித்தும்
ஆயப்பா ஓமம்கருஞ் சீரகந் தான்
அப்பனே மாவிலிங்க வேருஞ் சேரே. (133)

சேரப்பா வால்மிளகு மிளகு ரெண்டுஞ்
செம்மையுடன் பற்பமது செய்து கொண்டு
கூரப்பா மருந்தையெல்லா மிடித்து வாங்கி
கூடச்சேர் தண்ணீரும் படி யிரண்டு
ஆரப்பா எட்டொன்ருய்க் குறுகக் காய்ச்சி
அப்பனே சன்னிகண்ட மனிதர்க் கிய
காரப்பா சன்னியொடு விஷதோ ஷங்கள்
காடாது கஷாயமது கண்ட போதே. (134)

சிங்கிபற்ப அனுப்பானக் கஷாயம்.

தானென்ற மாத்திரையைக் கியாழத் தோடே
தனக்கிய நோயெல்லாந் தவறுண் டேபோம்
வானென்ற இன்னுமொரு கியாழஞ் சொல்வேன்
வளமான கியாழந்தான் மெத்த நன்று
ஆனென்ற யானைப்பட்டை உதியம் பட்டை
அப்பனே சித்தாமுட்டி பேரா முட்டி
கானென்ற வில்வவேர் நெல்லி யிர்க்கும்
கானுநரிப் பயத்தின்நில வாகை வேரே. (135)

வேரப்பா நெருஞ்சிவேர் நெற்பொ ரியுங்
விகசிதவே ரிலைத்தாமரை கீழ்க்காய் நெல்லி
நாரப்பா ஆவாரை வேருங் கூட்டி
நலமான தாளியுடன் சீரகந் தான்
ஆரப்பா சீரகத்தைப் பொரிய வைத்து
அப்பனே மருந்தெல்லா மிடித்துக் கொண்டு
காரப்பா தண்ணீர்படி முக்கால் விட்டு
கனமாகத் தீயெரித்து எட்டொன் ருக்கே. (136)

ஆக்கப்பா சிக்கிபற்பம் போட்டுக் கொள்ளு
    ஆனதொரு மேலெரிவு கைகால் காந்தல்
வாக்கப்பா நெஞ்சுவயிற் றெரிவு காந்தல்
    வளமான கண்ணெரிச்சல் மண்டைக் குத்தல்
சாக்கப்பா சஞ்சார பித்தத் தாலே
    சார்ந்துவருங் கொடியதொரு நோய்கள் யாவும்
நாக்கப்பா நந்தீச ரருளி னாலே
    நலமாகப் போகுமடா நவிலக் கேளே. (137)

ஆக்கிராணம்

கேளப்பா ஆக்கிராண மகிமை சொல்வேன்
    கிருபைவைத்து என்னைப்போ லார்தான் சொல்வார்
வாளப்பா தும்பைவேர் வெண்மிளகு கூட்டு
    வளமிலுப்பைப் புண்ணாக்கும் முருங்கை வேரும்
ஆளப்பா விதுவெல்லா முலர்த்திக் கொண்டு
    அப்பனே பலமொன்று தூக்கி வாங்கு
நாளப்பா தூள்பண்ணி வைத்துக் கொண்டு
    நலமாகக் குப்பிதனிற் பதனம் பண்ணே. (138)

பண்ணப்பா பூசித்துச் சன்னி நோய்க்குப்
    பணவிடைதா னெடுத்துநா சியினிற் போடு
புண்ணப்பா சன்னிதோஷம் நாவ ரட்சி
    போகுமடா குளிருடனே தோஷங் காய்ச்சல்
கண்ணப்பா சடலம்விட் டோடிப் போகும்
    கனமான பீடைநோய் யாவும் போகும்
மன்னப்பா ஆக்கிராண மறைப்போ யில்லை
    மகத்தான சீடர்களே மகிழ்ந்து பாரே. (139)

பாரப்பா விதுக்கெல்லா முப்பூப் போடு
    பரிவான முப்பிட்டால் வைத்திய னாவாய்
காரப்பா முப்புவிட்டால் விடாது கர்மங்
    கனமான நிஷ்டையது முப்பூ வையா
ஆரப்பா முப்புவடா க்ஷணத்தி லாரம்
    அப்பனே முப்பூவை வேண்டிக் கொள்ளு
நாரப்பா வைத்தியனுக் கிந்நூல் போதும்
    நாதாக்க ளிதுவாகும் நன்றாய்க் கேளே. (140)

கேளப்பா தேருவோர்க் கிந்நூல் போதும்
கேள்மகனே ஞானியருக் கிந்நூல்வேணும்
ஆளப்பா வாதிகளுக் கிதுவே போதும்
அப்பனே வயித்தியருக் கெந்நூல் வேணும்
வாளப்பா என்நூலைப் பார்க்கா தோர்கள்
வளமாகச் செய்முறைகள் தெரியா ரப்பா
நாளப்பா கருக்களுடன் கைபா கங்கள்
நலஞ்சொன்னேன் சீடர்களே நன்மை பாரே. (141)

பாரப்பா வேண்டுமுறை யிதிலே சொன்னேன்
பண்பான கருக்களையுந் திறந்து சொன்னேன்
ஆரப்பா அறிவர்கருக் கிடைசூஸ்த் திரத்தை
அப்பனே முழுதுமிதைக் கண்ட பேர்க்கு
வாரப்பா ஒருநாளுங் குறையு மில்லை
வளமான சடாட்சரம்போ லின்னூ லையா
மாரப்பா ஆயிரத்து இருநூற் றுக்கும்
வகையான இந்நூல்தான் திறவு கோலே. (142)

கோலான முதன்மொழிகா வியமுஞ் சொன்னேன்
குருவாக பின்புகலைக் ஞானஞ் சொன்னேன்
மேலாகத் தேறுதற்கு ஐந்நூறு சொன்னேன்
வேணுமென்று பன்னீரா யிரமுஞ் சொன்னேன்
காலாகக் கால்தலையால் மறைத்த தெல்லாம்
கனமான நிகண்டிலே திறந்து சொன்னேன்
ஆலான முன்னூறை கொடுக்கா ரய்யா
அப்பனே நிகண்டைநீ தேடிக் கேளே. (143)

கேளப்பா நான்சொன்ன முப்பூ வைத்தான்
கிருபையுள்ள நாதாக்கள் கொடுக்கா ரப்பா
வாளப்பா நவகோடி சித்த ரெல்லாம்
வாங்கியென்றன் நிகண்டதனை மறைத்துப் பேட்டார்
காளப்பா சித்தர்சபை தன்னிற் சென்று
கைலாச வர்க்கமெனக் கனிந்து வாங்கி
ஆளப்பா செயநீரின் பெருமை தன்னை
ஐம்பதிலே வெளியிட்டே னறிந்து பாரே. (144)

பாரப்பா வெகுகோடி சித்துக் கெல்லாம்
பண்பான செயநீரி லெடுத்து ஆட்டு
வாரப்பா வடமொழியால் ஈவமாங் கோடி
வளமான செயநீரு மின்னு லையா
காரப்பா தமிழ்வல்லோன் அகஸ்தி யர்க்குங்
கனந்தபதி னெண்பேர்க்குங் குருநா லென்னூல்
ஆரப்பா அறிவார்கள் பதினெண் பேரும்
அப்பனே என்னூலை மெச்ச லாச்சே. (145)

ஆச்சப்பா யீசருட கிருபை யாலே
அப்பனே அகஸ்தியரும் பொதிகை சேர்ந்தார்
காச்சப்பா சித்தர்களுங் கூடப் போனர்
கருவான பொதிகையிலே யிருத்தி வைத்தார்
நாச்சப்பா தென்பொதிகைச் சித்த ரெல்லாம்
நலமாகச் சதுரகிரி தன்னிற் சென்றார்
வாச்சப்பா வெளியாக வைத்தியஞ் சொன்னர்
மகத்தான சித்தருட வாக்கியத் தானே. (146)

தானன சீடர்களே இன்னுஞ் சொல்வேன்
தாக்கான என்னூல்தான் செப்பே டையா
வானன என்சீட ரெல்லோ ருந்தான்
வளமாகத் தேருதற்கு எழுதி விட்டேன்
கானன கருவாளி தேர்வான் பாரு
கருவாக நால்யுகத்தி லுள்ளோர் தன்னில்
ஆனன தர்மவான் தேர்வா னப்பா
அப்பனே கருமிகளுந் தேரு பாரே. (147)

வல்லாரைக்கற்பம்.

பாரப்பா கற்பத்தின் மகிமை கேளு
பண்பான வல்லாரைச் சமூலம் வாங்கி
சேரப்பா சுத்திசெய்து உலர்த்திக் கொண்டு
செயமான கல்லுரலிற் றூளாய்ப் பண்ணி
வாரப்பா சூரணத்தை யொரு கரண்டி
வளமாக ஊசிநீர் தன்னிற் கொள்ளு
ஆரப்பா யோகநிஷ்டை யமுதஞ் சொன்னேன்
அப்பனே சான்வயிற்றின் பசியும் போமே. (148)

உருத்திர கற்பம்.

பேரமப்பா நிஷ்டையுட கற்பஞ் சொன்னேன்
புகழான ருத்திரனுட கற்பங் கேளு
ஆமப்பா அடிமூலம் தன்னை வாங்கி
அப்பனே சுத்திசெய்து உலர்த்திக் கொண்டு
காமப்பா கல்லுரலிற் றூளாய்ப் பண்ணி
கரண்டிநிறை யுடன்கொள்ள தேக சித்தி
வாமப்பா யோகமுள்ள மாண்ப ருக்கு
வளமாகச் சித்திக்கும் வகுத்துப் பாரே. (149)

வங்கபற்பம்.

பாரப்பா வங்கபற்பஞ் சொல்லக் கேளு
பரமான சாதாக்கள் மறைத்தா ரையா
ஆரப்பா வங்கமது பலந்தா னெட்டு
அரியசுத்த சலந்தனிலு முருக்கிச் சாய்த்து
வாரப்பா அஞ்சுதர முருக்கிச் சாய்க்க
வளமான வங்கமது வெள்ளி வட்டாம்
நாரப்பா சொன்னசிவன் வேம்புத் தைலம்
நலமாக அதில்முப்பூ விட்டுக் கேளே. (150)

கேளப்பா ஆட்டிவிடில் மெழுகு போலாங்
கெடியாக அக்கவச மெழுகைப் போட்டு
வாளப்பா விந்துவினுற் கவசங் கட்டி
வளமாகச் சீலையது எழுஞ் செய்து
காளப்பா ரவியுலர்த்திக் காயப் போடு
நலமாமுப் பத்திரண் டெருவிற் போடு
ஆளப்பா அரனுதித்தாப் போலே வெள்ளை
அப்பனே போட்டெடுத்துக் கவசம் வாங்கே. (151)

வாங்கப்பா மெழுகதுவுங் கருகி நிற்கும்
வளமாக வங்கமது வெந்நீர் போலாம்
வாங்கப்பா சயகாச மீளை ரெத்தம்
வகையான சயமெட்டுஞ் சாந்த மாகும்
வாங்கப்பா வெந்நீர் தானென்ன சொல்வேன்
மகிழ்வாக வங்கபற்பந் தேனிற் கொள்ள
வாங்கப்பா வெண்ணெய்நெய்யிற் பணந்தான் கொள்ள
வசமாமேக மிருபத் தொன் றும் போமே. (152)

தாமிரபற்பம்.

போமப்பா அனுப்பான மறிந்து கொண்டாற்
புகழான சூலைபதி னெட்டும் போகும்
ஆமப்பா பீனிசமுங் கபாலச் சூடும்
அப்பனே அகன்றுவிடும் நோய்கள் பாரு
காமப்பா தாமிரத்தின் வெள்ளை கேளு
கனமான தாமிரமும் பலந்தா னைந்து
நாமப்பா காய்ச்சியே ஊசி நீரிற்
நலமாகப் பன்னிரண்டு தரந்தான் தோயே. (153)

தோயப்பா செம்பினுட ஊரல் போச்சு
துய்யநிற மானதொரு அயச்செம் பைத்தான்
ஆயப்பா முப்புசுண்ணக் காரங் கொண்டு
அப்பனே கல்வத்திற் பலம்ரண் டிட்டு
நேயப்பா அண்டநீர் தன்னு லாட்ட
நிசமாக மெழுகதுபோ லாகும் பாரு
மாயப்பா வழித்தெடுத்து செம்பிற் பூசி
மகத்தான ரவிதனிலே காய வையே. (154)

வையப்பா கிடுகிடென்று நடுங்கிச் சாகும்
வளமாகச் செம்பதின்மேல் எழு சிலை
கையப்பா பலாமரத்தைத் தோண்டிக் கொண்டு
கனமான செம்பைவைத் தாப்ப டித்து
நையப்பா அதன்மேலே மண்ணுஞ் செய்து
நலமாகப் புடம்போட்டு எடுத்துப் பாரு
மெய்யப்பா வெள்ளைநிற மென்ன சொல்வேன்
மேலாந்தா மிரவெள்ளை பதனம் பண்ணே. (155)

பண்ணப்பா யிக்கருவை கொடுக்கக் கேளு
பண்பான அபானனுடன் வியானன் கூட்டி
அண்ணப்பா ஆனைக்கால் வியாதி யோர்க்கு
அப்பனே கொடுஅவர்செய் பாவ ரோகங்
கண்ணப்பா பறங்கிநாற் பதும் போகும்
கனமான அனுப்பான மறிந்து செய்யா
விண்ணப்பா வியாதியது ஓடிப் போகும்
வேதாந்த பற்பத்தின் மகிமை காணே. (156)

காணப்பா உதானனுடன் சமானன் கூட
கனமான கருமிகட்கு ரோக மெய்தும்
வீணப்பா வெருகோடி பாவஞ் செய்தால்
வீணான விரைவாதம் வந்து சேருங்
ஆணப்பா சேர்த்துச்சூ ரணத்திற் கொள்ள
அப்பனே வாயுவெல்லாந் தலைகெட் டோடும்
மாணப்பா சடத்திலுள்ள வியாதி யெல்லாம்
மதிகெட்டு ஒடிவிடு மகத்துவம் பாரே. (157)

பாரப்பா பற்பத்தைச் செய்தோர்க் கெல்லாம்
பண்பான நல்வினைகள் வந்து சேரும்
ஆரப்பா அறிவார்கள் கர்மந் தீர்த்தால்
அப்பனே அத்தரும மவர்க்கே யெய்தும்
வாரப்பா பித்தளையின் வெள்ளை கேளு
வளமான பித்தளையைக் காய்ச்சிக் காய்ச்சி
நாமப்பா விந்துவிலே தோய்க்கத் தோய்க்க
நலமான பித்தளையின் களிம்பு போச்சே. (158)

## பித்தளைப் பற்பம்.

போச்சப்பா அண்டத்தை மெழுகாய்ப் பண்ணிப்
புகழாகப் பித்தளையைக் குகைக்குள் வைத்து
ஆச்சப்பா முக்கிரிவித்து தைலம் வாங்கி
அப்பனே குகைக்குள்ளே தைல மூற்றி
வாச்சப்பா மேற்குகையை வைத்து மூடி
வலுவாகச் சந்துவாய் சீலை செய்து
காச்சப்பா புடம்போட்டு எடுத்துப் பாரு
நலமாக நீறுமது நவிலக் கேளே (159)

கேளப்பா நீகுகையை உடைத்துப் பாரு
கெடியான பற்பத்தைப் பதனம் பண்ணி
வாளப்பா பற்பத்தை நோய்கட் கீய
வளமான கருமநோய் நாடா தப்பா
நாவப்பா நாட்செல்ல மாட்டா தப்பா
நலமாகச் சலுதியிலே நோய்கள் தீரும்
ஆனப்பா வைத்தியர்க்குப் பற்பம் வேணும்
அல்லாட்டாற் பலிதமே யில்லை பாரே. (160)

அயப்பற்பம்.

இல்லையப்பா அயபற்பஞ் சொல்லக் கேளு
இதமான அயமதைநற் கனமாய்த் தட்டி
வல்லப்பா பனிநீரிற் காய்ச்சித் தோய்த்து
வளமாக எட்டுதரந் தோய்த்துக் காய்ச்சு
அல்லப்பா அருணநிறம் போலே யாகும்
அப்பனே அயத்தகடு வெட்டை யாச்சு
கல்லப்பா உப்புடனே முப்பூச் சுண்ணம்
கனமான வாய்நீராற் குழைத்துக் கொள்ளே. (161)

கொள்ளப்பா தகட்டின்மேற் கவசஞ் செய்து
குணமான மண்சீலை வலுவாய்க் கட்டி
அள்ளப்பா ரவியுலர்த்திப் புடத்தைப் போடு
அப்பனே நீறியது வெண்ணீ றாகும்
வள்ளப்பா வெண்ணீற்றை யெடுத்துக் கொண்டு
வளமாகப் பணவிடைதான் நோய்கட் கீய்ந்தால்
நள்ளப்பா நசித்துவிடும் பாண்டுக் கெல்லாம்
நலமான பற்பமடா நலமீ தாமே. (162)

வெங்கலப் பற்பம்.

ஆமப்பா வெங்கலத்தின் பற்பஞ் சொல்வேன்
அப்பனே புளியிலைச்சார் பிழிந்து கொண்டு
வாமப்பா முப்பூவின் சுண்ணம் போட்டு
வளமான வெங்கலத்தைக் காய்ச்சித் தோய்க்க
சேமப்பா வெங்கலத்தின் துப்புப் போச்சு
செயமான வெங்கலத்தை எடுத்துக் கொண்டு
காமப்பா அப்புளியைக் குகையாய்ப் பண்ணி
கனமான வெங்கலத்தை அதனுள் வையே. (163)

வையப்பா மேற்குகைக்கேழ் சீலை செய்து
வகையாக ரவியுலர்த்திப் புடத்தைப் போடு
மெய்யப்பா புடமாறி யெடுத்துப் பாரு
மெதுவாக நீறியது வெண்மை யாகும்
கையப்பா குகைதட்டி யெடுத்துக் கொள்ளு
கனமான பற்பமது எடைபோ காது
நையப்பா நோய்களுக்குக் கொடுத்துப் பாரு
நசியாத நோய்களெல்லாம் நசித்துப் போமே. (164)

### திராப்பற்பம்.

போமப்பா திராவினுட பற்பங் கேளு
புகழான பற்பத்தை யாருஞ் சொல்லார்
வாமப்பா திராவதனைக் காய்ச்சிக் கொண்டு
வளமான யிலைச்சாறு பிழிந்து கொண்டு
காமப்பா முப்பூவில் விராகன் போடு
கனமாக ஏழுதரந் திராவைத் தோய்க்க
ஆமப்பா திராவதுவுஞ் சுத்தி யாச்சு
அப்பனே பற்பமது வாகக் கேளே. (165)

கேளப்பா வழலைமெழு கதனைப் பூசி
கெடியாக விந்தாலே சீலை செய்து
ஆளப்பா புடமதைப்போட் டெடுத்துப் பாரு
அப்பனே நீறியது வெண்ணீ றாகும்
வாளப்பா மேககோ யெல்லாந் தீரும்
வளமான நோய்களெல்லாம் பறந்து போகும்
நாளப்பா வியாதியென்ற துன்பந் தானும்
நாடாது ஒருநாளும் நன்மை பாரே. (166)

பாரப்பா குருமுடித்து வைத்தியஞ் செய்தாற்
பண்பான வைத்தியனென்ற பேருண் டாகும்
ஆரப்பா கருவிதனை யறியா மூடர்
அப்பனே முப்பூவைச் செய்யா மற்றோன்
காரப்பா நாடதிலே பொருளே சொல்லி
களினமென்ற தழைகளிலே வைத்தியஞ் செய்வே
காரப்பா கர்மமதிற் கர்மம் வந்து
கடுகவே சித்திக்குங் கண்டு கொள்ளே. (167)

கொள்ளவே வாதமப்பா முப்பூ வாலே
கொடிதான ஞானம்வரும் முப்பூ வாலே
அள்ளவே தந்திரமா யிந்திர ஜாலம்
அப்பனே முப்பூவா லாச்சு தப்பா
நல்லவே யோகமுடன் வைத்தியப் போக்கும்
நலமாக முப்பூவா லாச்சு தப்பா
விள்ளவே மாட்டார்கள் யான்தான் விண்டேன்
வேதாந்த அகஸ்தியர்தன் மகத்துவங் கேளே. (168)

கேளப்பா யாவருக்குந் தெரிய வேண்டி
கெடியான பஞ்சகா வியநூல் சொன்னர்
ஆளப்பா சகலகலைக் கியானஞ் சொன்னர்
அப்பனே அம்மொழிபோ லாருஞ் சொல்லார்
தேளப்பா கொட்டுதல்போற் சீக்கி ரத்தில்
தேருவார் தேரும விருக்தோ ருக்கு
வாளப்பா வாதமென்ற காவி யக்தான்
வளமாக ஆயிரமுஞ் சொன்னர் பாரே. (169)

பாரப்பா கற்பங்கள் கன்ருய்ச் சொன்னர்
பண்பான ரசத்தின்கண் ணுடி சொன்னர்
ஆரப்பா அறிவார்கள் கற்பக் தன்னை
அப்பனே நூற்றியைம் பதிலே சொன்னர்
வாரப்பா அதைத்தழுவி நானுஞ் சொன்ன
வளமான நிகண்டப்பா யார்தான் காண்பார்
நேரப்பா என்நிகண்டு போலே யுண்டோ
நிலையான நிகண்டைநீ அடக்கம் பண்ணே. (170)

பண்ணன அகஸ்தியர் காவியமும் பார்த்து
பண்பான நந்தியுட காவியமும் பார்த்து
எண்ணன என்னுடகா வியமும் பார்த்து
இயல்பாக அடக்கமதாய்ப் பூசை செய்து
விண்ணன வழிதுறையாய்ச் செய்து கொள்ளு
விதமாக அறிவுள்ளோர் தேர்ந்து கொள்வார்
கண்ணன கைபாகஞ் செய்பா கங்கள்
கருத்தாகச் சொல்லிவிட்டேன் கண்டு கொள்ளே. (171)

இரசசேந்தூரம்.

கொள்ளப்பா செந்தூர மகிமை கேளு
கொடிதான ரசத்தின்செந் தூரஞ் சொல்வேன்
விள்ளப்பா வாலைரசம் பலந்தா னெட்டு
மிகமகிழ்வாய்க் கல்வமதி லிட்டு மைந்தா
மெள்ளப்பா பஞ்சமலங் கொஞ்சம் போடு
மேலான விந்துநீர் சாம மாட்டு
அள்ளப்பா மெழுகதுபோ லாகும் பாரு
அப்பனே வழித்தெடுத்து வில்லை பண்ணே. (172)

பண்ணப்பா புளியதனுற் குகைதான் செய்து
பன்பான வில்லையைத்தா னுள்ளே வைத்து
அண்ணப்பா மேற்குகைதான் கொண்டு மூடி
அப்பனே மண்சீலை ஏழுஞ் செய்து
கண்ணப்பா ரவிதனிலே வைத்திட் டாக்காற்
கண்மணியே வெங்கலம்போற் காய்ந்து போகும்
வண்ணப்பா பத்தெருவிற் புடத்தைப் போடு
வளமான செந்தூர மாகு மாமே. (173)

ஆமப்பா செந்தூரம் பதனம் பண்ணி
அப்பனே பணவிடைதா னெருபோ துண்ண
போமப்பா பித்தசூலை மண்ட லத்திற்
போகுமடா வாதசூலை சிலேத்ம சூலை
நாமப்பா சொல்லாது ஓடிப் போகும்
நலமான சூலைபதி னெட்டுந் தீரும்
கர்மப்பா கர்மநோய் ரணங்கள் சூலை
கனமான செந்தூரம் பட்டாற் போமே. (174)

காந்தச் செந்தூரம்.

போமப்பா காந்தச்செந் தூரங் கேளு
புகழான காந்தமது பலந்தான் ரெண்டு
நாமப்பா கெந்தியது பலந்தான் ரெண்டு
நலமான வீரமது பலந்தா னென்று
வாமப்பா இது மூன்றுங் கல்வத் திட்டு
வளமான முப்பூவுங் கழஞ்சு போடு
ஆமப்பா முருக்கம்பூச் சாற்றுல் சாமம்
அப்பனே கையான்சார் சாமம் ரெண்டே. (175)

ரெண்டான சாமமது மூன்று மாட்டி
ரேசகபூ ரகமுடனே வில்லை செய்து
வண்டான சீலையது மூன்று செய்து
வளமான கெஜபுடத்திற் போட நீறும்
நன்றான செந்தூர முருக்கம் பூப்போல்
நலமாக நீறிச்செந் தூர மாகும்
அன்றான செந்தூரம் பணவி டைகொள்
அப்பனே பண்டுகரு மத்தால் தானே. (176)

கெந்தகச் செந்தூரம்.

பண்டான பாண்டுகர்ம மோடிப் போகும்
பண்பான பாண்டுமுத லாறுந் தீரும்
அண்டான கெந்தியதின் செந்தூரங் கேள்
அப்பனே கெந்தியது பலந்தா னெந்து
வண்டான வீரமுடன் பூரம் லிங்கம்
வளமாக இதுவெல்லாம் பலந்தான் வீதம்
கண்டான கல்வத்தி லெல்லாம் போட்டு
கனமான முப்பூவைக் கழஞ்சு போடே. (177)

போடப்பா பொற்கையான் சாற்று லாட்டிப்
புகழான ஆனைப்பால் சாம மாட்டு
வாடப்பா முருக்கம்பூச் சாற்றால் சாமம்
வளமாக ஆட்டிவர மெழுகு போலாம்
ஆடப்பா புளியாலே குகைதான் செய்து
அப்பனே குகையைத்தா னுலர்த்தி வைத்து
நாடப்பா கெந்தியில்லை யதனில் வைத்து
நலமாக மேலுமந்தக் குகையை வையே. (178)

வையப்பா மேற்குகைதான் கொண்டு மூடி
வளமான மண்சீலை யேழுஞ் செய்து
கையப்பா காடையென்ற புடந்தான் போடு
கனமான செந்தூர மென்ன சொல்வேன்
நையப்பா நாதசெந் தூரம் போலாம்
நாடதிலே சித்தர்கள்தான் சொல்லா ரையா
மெய்யப்பா சொல்லி விட்டேன் விதியறிந்து
மேதினியில் சீடர்களே செய்து கொள்ளே. (179)

கட்டுவேகைச் செயநீர்.

கொள்ளப்பா மண்டலந்தான் சாப்பிட் டாக்கால்
குறைநோயுங் குட்டமுடன் சூலை போகும்
விள்ளப்பா நரைதிரைக ளெல்லாம் போகும்
விதமாகக் காயத்துக் குறுதி யாகும்
அள்ளப்பா கட்டுவகைச் செயநீர் கேளு
அப்பனே சொல்லுகிறே னறிகு வாய்நீ
நள்ளப்பா தலைக்கிழங்கு தன்னை வாங்கி
நலமாகக் கிழங்கினுட வீரம் போக்கே. (180)

போக்கப்பா பூமலியை வாங்கிக் கொண்டு
புகழான பீங்கானிற் கலக்கி வைத்து
ஆக்கப்பா சுத்தசல முப்பூப் போடு
அப்பனே ரவிதனிலே சதுர்நாள் வைக்க
நாக்கப்பா நல்லதண்ணீ ரமுதம் போலாம்
நாதாந்தச் செயநீரைப் பதனம் பண்ணு
வாக்கப்பா என்வாக்கு அமுத வாக்கு
வளமையாய்ச் சத்தியமாய்ச் சொல்லி னேனே. (181)

லிங்கக்கட்டு.

சொல்லப்பா லிங்கத்தைத் துவைத்து வாட்ட
சொற்பெரிய லிங்கமது மெழுக தாகும்
அல்லப்பா மனிதருக்கு வருந்தோ ஷங்கள்
அப்பனே சன்னிசுர மகன்று போகும்
மெல்லப்பா தாளகத்தைத் துவைத்து வாட்டி
வெகுபதமா யெடுத்தின்னுஞ் சொல்லக் கேளு
செல்லப்பா வெடியுப்பைச் செயநீர் தன்னில்
சிறுகரைத்துப் புடம்போட உப்பாம் பாரே. (182)

தாளகவுப்பு.

பாரப்பா தாளகத்தி னுப்பி னாலே
பரிவான மேகமது அறுபத் தொன்றும்
ஆரப்பா மேகமெல்லா மறியப் போறுர்
அப்பனே ஓடிவிடு மறிந்து பாரு
நேரப்பா தாளகத்தி னுப்பார் சொல்வார்
நேர்மையா யுப்புதனைச் செய்து கொள்ளு
வீரப்பா வீரத்தின் கட்டுக் கேளு
விதமான செயநீரிற் ருேய்த்துக் கொள்ளே (183)

கொள்ளப்பா கொடிவேலி யிலை யரைத்து
கொடிதான மேற்கவசஞ் செய்து பின்பு
அள்ளப்பா மண்குகையில் வைத்துக் கொண்டு
அப்பனே துருத்திகொண்டு ஊதி னுக்கால்
வள்ளப்பா வீரமது உருகிக் கட்டும்
வளமாகக் கட்ட தனைப் பூசை பண்ணு
சள்ளப்பா கட்டெடுத்துத் தோஷத் திற்குஞ்
சன்னிக்கும் ஒருஉரைப்பு உரைத்துக் கேளே. (184)

பூரக்கட்டு.

கேளப்பா குளுமைவிஷச் சன்னி போகுங்
கெடியான வீரத்தின் பெருமை மெத்த
ஆளப்பா பூரத்தின் கட்டுக் கேளு
அப்பனே பூரத்தின் கட்டி வாங்கி
சூளப்பா ஒட்டிவிட்டுச் செயநீ ராலே
சுருக்கிட்டாற் பூரமது உருகிக் கட்டும்
வாளப்பா குளிருடனே சுரமுங் காய்ச்சல்
வளமான பூரத்தாற் றீரும் பாரே. (185)

வெள்ளைப் பாஷாணக் கட்டு.

பாரப்பா வெள்ளையுட கட்டுக் கேளு
பண்பான செயநீரு நாகச் சாறு
ஆரப்பா ஒட்டில்வைத்துச் சுருக்கித் தாக்கு
அப்பனே சணப்போதி லுருகிக் கட்டும்
நாரப்பா குருக்கட்டு அதுகட் டெல்லாம்
நலமான கட்டதனை யெடுத்துக் கொண்டு
வாரப்பா சுரத்திற்குக் கொடுத்திட் டாக்கால்
வளமாகப் பத்திரண்டு சுரமும் போமே. (186)

அப்பிரகச் செந்தூரம்.

போமப்பா அப்பிரகச் செந்தூ ரங்கேள்
புகழான கிருஷ்ணஅப் பிரகம் வாங்கி
வாமப்பா சுத்திசெய்து மண்ணைப் போக்கி
வளமான கல்வத்திற் பலமைந் திட்டு
ஆமப்பா கெந்தியது பலம் ரெண்டிட்டு
அப்பனே கட்டுவகைச் செயநீர் விட்டு
நாமப்பா கருங்கையான் சாற்றி லாட்டு
நலமாகச் சாமமது ரெண்டு மாட்டே. (187)

ஆட்டவே நாகஇலைச் சாமம் ரெண்டு
அப்பனே பொற்கையான் சாறு சாமம்
வாட்டவே பழச்சாற்றால் சாம மூன்று
வளமான முலைப்பாலிற் சாம மூன்று
காட்டவே சுண்ணமுப்புப் பலந்தான் போடு
கனமான அல்விச்சார் சாம மூன்று
காட்டியே ஆட்டியதை வில்லை செய்து
நலமாக ரவிதனிலே உலர்த்தி டாயே. (188)

ஐயப்பா அண்டோட்டைத் தூளாய்ப் பண்ணி
அப்பனே தெள்ளியதை மாவ தாக்கி
வையப்பா சுத்தசலந் தன்னை விட்டு
வளமாகப் பிசைந்துஅதைக் குகைபோற் பண்ணி
நையப்பா மேற்சில்லு மதனுற்செய்து
நலமாக ரவிதனிலே உலர்த்திக் கொண்டு
கையப்பா வில்லைதனைக் குகையில் வைத்து
கனமாக மேலுமந்தக் குகையை மூடே. (189)

மூடப்பா சீலைமண் ணேழுஞ் செய்து
முக்கியமுள்ள புடமுமிடுப் பளவு போடு
நாடப்பா காடாக்கினி யாய்வே கும்பார்
கனமான செந்தூர மென்ன சொல்வேன்
விடப்பா அருணனைப்போற் காந்தி வீசும்
விதமான செந்தூரம் பணவி டைகொள்
மாடப்பா நீர்கள்தித் திப்பாய் வீழ்தல்
மதிகெட்ட நீரிழிவும் பறந்து போமே. (190)

தைலம்.

நீரான நீர்மேகப் பிரமி யங்கள்
நிலைகெட்டுத் தலைகெட்டு நில்லா தோடும்
வாரான வசியத்தின் தைலஞ் செல்வேன்
வழியிந்திர கோபக்குழி யானை மின்னி
பூரானசுழல் வண்டிப் புலியோ டைந்தைப்
பொடிபண்ணி முத்தத்தூ சியினி லூட்டி
ஆரான தலைக்கிழங்கு செய்யை வாங்கி
அப்பனே கபாலத்தில் வார்த்துக்கொள்ளே. (191)

கொள்ளப்பா திரியதனைக் கொளுத்தி வைத்து
குணமான தலைக்கிழங்கு கவிழ்த்து மூடி
வள்ளப்பா எரியிடவே மைதான் பற்றும்
வளமான மையதனைச் சுரண்டிக் கொண்டு
வெள்ளப்பா புழுகுடன் கஸ்தூரி கூட்டி
விதமான முப்புவது கழஞ்சு போடு
விள்ளப்பா மத்தித்துச் சிமிழில் வைத்து
மேலான லலாடமதில் போட்டி டாயே. (192)

போடப்பா இதனாலே சௌக்கியஞ் சொல்வேன்
புகழான ஸ்திரிகளுக்குச் சிம்மென் றேசொல்
ஆடப்பா புடருக்கு நங்கென் றேசொல்
அப்பனே பெரியோர்க்கு மங்கென்றே சொல்
மீடப்பா சனங்களுக்கு வங்கென் றேசொல்
மிருகத்திற் கெல்லாந்தான் யங்கென்றே சொல்
வாடப்பா இவ்விதமாய்ச் செய்து கொள்ள
வளமான வைத்தியமு மாகும் பாரே. (193)

பாரப்பா கருக்கிடைதா னின் னு லப்பா
பண்பான வாதமது செய்யக் கேளு
ஆரப்பா அறிந்தவர்கள் முன்செந் தூரம்
அப்பனே ரவிபத்துக் கொன் று தானும்
நாரப்பா ரசஞ்சேர்கக்த் தங்க மாகும்
நளமான தங்கமடா சொக்கத் தங்கம்
வாரப்பா செந்தூரம் பட்ட போதே
வளமாக எல்லாமும் பொன்னாய்ப் போமே. (194)

பொன்னான லிங்கத்தின் கட்டு வாங்கி
பொருளாம்லோ கத்திற்கடு களவு ஈய
என்னான குபேரனவன் லோகத் துண்டோ
இதமான தங்கம்பத் தரைதா னாகும்
அன்றான ராசியுள்ளோ னனந்தங் காண்பான்
அப்பனே மற்றோர்கள் காணா ரையா
ஒன்னான உலகத்தில் வாதி சித்தர்
உயர்வாகச் செய்துகொண் டிருப்பார் பாரே (195)

பாரப்பா கர்மிக்குக் கிட்டி டாது
பண்பான சரிதையிலே மயங்கிக் கொண்டு
ஆரப்பா யிருந்தவர்கள் தெரிந்து கொண்டார்
அப்பனே கருமவித்தை யாகா தையா
நாரப்பா நல்லோர்கள் சிவயோ கத்தர்
நலமான வாதமதைக் காண்பா ரப்பா
வாரப்பா கர்மிகள்செய் பாவத் தாலே
வளமாகப் பலியாது சாபந் தானே. (196)

தானான மனையாளும் புருடன் பிள்ளை
 தனதாகச் சாப்பிட்டு உடல் வளர்த்து
வானான மாடிமெத்தை பெலமாய்க் கட்டி
 வளமான பணங்கொடுத்து வட்டி வாங்கி
மானான பெண்டீர்க்கு நகைகள் செய்து
 மகிழ்வாக யிருப்பதற்கோ வாதஞ் சொன்னேன்
வீணான மாயசத்தி பிடித்த மாந்தர்
 வீணருக்குப் பலியாது மயக்கந் தானே. (197)

மயக்கமது கொண்டலைவார் மாயப் பெண்ணால்
 மதிகெட்ட மாந்தருக்குப் பலித மாமோ
நயக்கமது வயிர்பிழைக்க அலைவா ரப்பா
 நயமில்லாச் சண்டாளர் நாச மாவார்
அயக்கமது புத்தியுள்ள சிவயோ கிக்கும்
 அப்பனே கன்னிதுலா ராசி யோர்க்கும்
தியக்கமிலா தேகிடைக்கும் யோகிக் குத்தான்
 திரமான மனக்கண்ணா லெல்லாங் காணே. (198)

காணப்பா அறிகுருவுந் தெரியுஞ் சாஸ்திரம்
 கண்மணியே யிதைவிட்டாற் குருவங் கேது
ஆணப்பா சித்தரென்ற பெரியோர் வந்தால்
 அப்பனே அவர்சொல்வா ரறிந்து பாரு
வாணப்பா விதியாளி தனக்குக் கிட்டும்
 வளமாக மற்றோர்க்குக் கிட்டா தப்பா
நாளப்பா விபரமுட னிரண்டு நூறில்
 நலமாகச் சகலகலை சொன்னேன் பாரே. (199)

சொன்னவட மொழிமூன்று லட்சம் வாக்கியம்
 சுருக்கியே காவியமா யிரத்திற் சொன்னேன்
அன்னதொரு ஐந்நூறு கலைக்ஞா னந்தான்
 அப்பனே உனக்காகச் சொல்லி விட்டேன்
வன்னதொரு வாதமொடு ஞானப் போக்கு
 வளமான கிரிகையொடு இந்திர ஜாலங்
கன்னதொரு யோகத்தி லனந்தம் போக்கு
 கனமான கற்பத்தில் அனந்தம் போக்கே. (200)

போக்கான என்னந்தி யருளி னாலே
பொருளான சகலமுந்தா னிதிலே சொன்னேன்
வாக்கான வைத்தியவா தங்கள் தானும்
வளமாகச் சொன்னதெல்லாந் தவறே இல்லை
நாக்கான நந்தீசர் மகிழ்ந்து தானும்
நன்மைபெற அமுதமென்றன் கைவி லீய்ந்தார்
ஆக்கான அசுவினியே உந்த னுக்கு
அருளினே னென்வாக்கா லமுதந் தானே. (201)

தானான நாதாக்கள் மறைத்த தெல்லாந்
தனதாக மாட்டினேன் நூல்கள் தோறும்
வேனான வேதாந்த வியாசர் தானும்
விளங்கியதோ ரென்தகப்பன் சொன்னஞானம்
ஆனான அவர்மொழிபோ லார்தான் சொல்வார்
அப்பனே பார்த்தவர்க்கு யோக மெய்தும்
கானான என்னுடைய மொழியைப் பார்த்து
கனமான பதினெண்பேர் தேர்ந்தார் பாரே. (202)

பாரென்ற என்சீஷ ரனேகம் பேரிற்
பதிவான அசுவினிக்குத் திறந்து சொன்னேன்
ஆரென்ற தேரையரும் ராம தேவர்
அப்பனே யோகசித்தி யடைந்து விட்டார்
வாரென்ற புலத்தீசர் கற்பஞ் சொன்னார்
வளமான ராமருமே மறைத்து வைத்தார்
காரென்ற அகத்தியருந் திறந்து சொன்னார்
கனகநூல் நூற்றியைம்பத் தைந்தும் பாரே. (203)

நூலான நூலப்பா அகப்ப டாது
நுணுக்கமாய் நுணுக்கிவிட்டார் நூல்கள் தோறும்
பாலான அகத்தியர்தன் நூலைப் பாரு
பஞ்சகா வியநூலின் காண்டம் பாரு
சாலான சௌமியசா கரத்திற் றானுஞ்
சடாட்சரம்போற் கருவெல்லா மதிலே சொன்னார்
நாலான என்னுடைய நாற்காண் டம்பார்
நலமாகச் சகலமுந்தான் சொன்னேன் நானே. (204)

சொன்னதொரு கலைக்கியானந் தன்னைப் பாரு
சொற்பெரிய நாதாக்கள் மறைத்த சூஸ்திரம்
வன்னமாய் வழிதுறையா யறிந்து சொன்னேன்
வளமாக எனைப்போல யாருஞ் சொல்லார்
கன்னமடா கருமந்தைச் செய்ய வேண்டாங்
கனமான தருமத்தைக் கருத்தி லெண்ணு
அன்னமடா கொலைகளது செய்ய வேண்டாம்
அப்பனே ஒருவரையும் வைதி டாதே. (205)

வைததினால் வெகுமானங் கிடைக்கப் போமோ
வளமான பெரியோரை நோக வேண்டாம்
பையவே மதுகஞ்சா அபினி தன்னைப்
பாக்குபெறக் குடிப்பவரோ டிணங்க வேண்டாம்
கையவே தர்மமது மிகவே பண்ணு
கனமான தெய்வத்தைப் பழிக்க வேண்டாம்
ஐயனே சந்நியாசி பெரியோர் வந்தால்
அப்பனே அவர்களையும் பழித்தி டாதே. (206)

பழித்தாக்கா லவர்பிழைக்கும் பிழைப்பெல் லாம்போம்
பரிவாக அன்னமிட்டு மோசஞ் செய்தால்
அளித்தாக்கா லென்னபல னுண்டோ வேண்டாம்
அப்பனே கெட்டோடே சாப மெய்தும்
களித்தாக்காற் பெரியோரைப் பழித்த கர்மம்
நலமாக எத்தேசம் போனாற் றீரும்
வளித்தாக்கால் வல்வினைகள் வந்து சேரும்
வளமான பாவமடா வகுத்துப் பாரே. (207)

பாரப்பா நால்வேதத் தொகுப்பைப் பாரு
பண்பான வேதாந்தக் குறியைப் பாரு
ஆரப்பா வாதியுட குறியைக் காரு
அப்பனே கண்ணோட்ட மறிந்து பாரு
நேரப்பா நின்றநிலை தன்னைக் காண
நேரான கருவிகளோ டொக்கக் காணும்
சீரப்பா நாதாந்த வைத்திய மின்னால்
சிறப்பான வைத்தியக்தா னிருநூறு முற்றே. (208)

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# NEW CATALOGUE OF BOOKS.

# புதிய புத்தக கேட்லாக்.

## இ. ராம. குருசாமிக்கோனர் ஸன்

புத்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

## பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

# சித்தவைத்திய அகராதி,

( இது ஓர்பெரிய வைத்திய அகராதி. )

இதில் பச்சிலை, கடைச் சரக்கு, பஞ்சபூதச் சரக்கு, உபரசச் சரக்கு, 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம், செய்ய சரக்குகளின் உருக்கின சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், 64 பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பார்த்து இதினுண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன் 280 பக்கங்கள் கொண்டது,

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

## அகத்தியர் பரிபாஷை 300,

ஓலை யேட்டுச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் வெளிவந்தது (அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் இருந்து வருகிறது இது புதிதாக இப்பொழுது அச்சிட்டது,

புத்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும் முப்பூ விபரமும், வழலை மார்க்கமும் தெளிவாகக் கூறியுள்ளது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 0—14—0

# யூகிமுனிவர் 1200

## கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கைவசமாய் வெளி வராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

# அகத்தியர் சௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளி வராமல் ஏட்டுப் பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்தது அவர் இதை தன்னனுபவத்தில் வைத்துக் கையாண்டு வந்ததை வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகத் தெளிவாகச் சொல்லியுள்ள அருமையான சாஸ்திரம்.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம்,யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்து கொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடையும் மார்க்கமும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு மித்துரு விபரங்களும் சொல்லியுள்ளது.

கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1-வது வைத்திய காண்டம், 2-வது வாத காண்டம், 3-வது சுண்ணக்காண்டம், 4-வது செந்தூரக் காண்டம், 5-வது பற்பகாண்டம், 6-வது தைலக்காண்டம், 7-வது கற்ப காண்டம், 8-வது யோக ஞான காண்டம், 9-வது தீட்சாவிதி காண்டம், 10-வது சாபநிவர்த்தி காண்டம், 11-வது ஜாலகாண்டம், 12-வது மந்திர காண்டம், ஆக பன்னிருகாண்டமா யுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

# கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 கிடைத்தலைத மாத்திரம் வெகுநாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்குந் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காம லிருந்து இப்பொழுது ஒரு ஏட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம். 1-க்கு விலைஅணா 0—10—0

## அகத்தியர் கற்ப முப்புக் குருநூல்

இதில் கற்ப விதிகளும், முப்பூ முடிக்கும் விபரமும், பற்பம் செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும், சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோணச் சக்கரத்தின் பூஜா விதிகளும், கற்ப தீட்சை முறைகளும், தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

## இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைல முறைகளும், வைத்திய முறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரமும், பற்பம் செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது.

புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

ஷையார் சிவயேகம் 200 புத்தகம் 1-க்கு அணு 0 6 0

## விஷவைத்திய மென்னும்

# "ஒன்பது விஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிஷ ஆரூடசாஸ்திரங்களைச் சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காளி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய், குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2...0...0

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்பசாதனைகளின் விபரங்களையும், யோகஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரிதியிலிருந்து புதிதாய் அச்சிட்டது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

## புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இந்தச் சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குறிய செம்பு வேதை, செம்புச் செந்தூரவேதை, துருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தக தைலம் நாகரச கெந்தி 'தைலத்தின் பெருமையும் அதினால் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அறு போக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

## தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷெயாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

## கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பா்வாகவும், சிந்தாகவும் பலமாதிரி சந்தங்களாய் விநோதமாகச் சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும், அதை எந்தவிதத்தில் முரித்துச் சாப்பிடுகிறது என்பதும், அதை எப்படி உபயோகிப்ப தென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்படக்கூடிய சூடு சோப தாபங்களுக்கு வேண்டிய சிஷாயங்களும் அதுசமயம் ஸ்நானம் செய் யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங் களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் பண்ணிக் கொள்ளவேண்டிய முறையும், வாத முறைகளுக்குத் தைல வகைகளும், சுத்தி முறைகளும், சிதம்பரத்தில் தங்க விக்கிரகஞ் செய்த விபரமும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம்.

புத்தகம் 1 க்கு விலை அணு 0—10—0

# அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்.

மணக்கோலம் 200, கணக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிருக்கு நூல் என்னும் கிரிகை 18 க்கும், குணமும்' நிவர்த்தி செய்யும் மருந்து பாகங்களும். அடங்கியது. ஆக 5 சாஸ்திரங்கள்.)

இதில் வயித்திய பாகங்கள் பாஷாணங்களில்லாது கடைச் சரக்கு களைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல நோய்க ளையும், தீர்க்கு வண்ணம், கைபாகஞ் செய்பாகம், முறையோடு சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு, வாத பித்த சிலேற்பனத்தால் ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களினுல் மருந்தும், கலிக்க வகைகளும், நசிய வகை களும், துவாலை வகைகளும், தெளிவாய்க் கூறியுள்ள அரிய பெரிய சாஸ்திரம் இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய தவசியம் அவர வர்களே மருந்துகள் செய்து கொடுத்து வியாதியை குணப்படுத்திக் கொள்ளும் முறைகளாய் அடங்கியுள்ள சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை அணு 0--12—0

# காக புசுண்டர் 1000.

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இது வரை சில சாஸ்திரங்கள் மட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷை யாரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரம் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

## அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இது அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது. இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மமான பதங்களுக்குத் தாத்பரியங்களையும் விபரமாகக் கூறியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணு 0—10—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

## யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்கு சென்றுநபிமார்களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள். பின்பு யூனானிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புஸ்தகங்களாகப் பயிண்டு செய்திருப்பதால் தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வசாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைகளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

## உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது, இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 என்றநூல் மட்டுந்தான் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது இன்னும், கூடியசீக்கிரத்தில், இவரால் பாடிய சாஸ்திரங்கள் அச்சிட்டு வெளிவரும், இப்பொழுது இந்த பரிபாஷை 300 அச்சிட்டு தயாரிலிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

## கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடிப்பவர்களுக்கும், சுவாமி அருள் பொங்கிக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி ஆடிகளுக்கும், ஆருடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் முக்கியமானது- பலதேவதைகளின் பெயர்களும் கிராமங்களின் பெயர்களும் குறிசொல்லுகிற விபரங்களும் ஆங்காங்கு தெளிவாக யாவரும் அறியும் வண்ணம் கூறியிருக்கிறது.

பாகம் 1-க்கு விலை அணா 0—3—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

## பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0--3—0

உ

தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய் மொழிந்தருளிய
ஞான யோக சாஸ்த்திர ஆராய்ச்சி நிலையம்,
ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவில் (வடக்கு ஆடி வீதி,)
மதுரை.

ஸ்தாபகர்:-

ந. சுப்பிரமணியபிள்ளை என்ற ஞானபண்டிதசுவாமி